# மின்சார ஊழியர் அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

ஈழநாடு
THE EELA NADU

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 222
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 6 றஜப் 9 திங்கட்கிழமை (22-9-69)

கோட்டை, ஞாயிறு

அரசாங்க மின்சார இலாகாவைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் கூட்டுக்கமிட்டி நேரடித் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

இம்மாதம் 28-ம் திகதிக்குள் தமதுகோரிக்கைகளுக்கு சுமுகமான தீர்வுகாணப்படாவிட்டால் இந்த நேரடி நடவடிக்கையில் இறங்கப்போவதாக இந்த யூனியன்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளன.

செப்டம்பர் 13-ம் திகதி தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியின் பின்னர் அரசாங்கத் திடமிருந்து எதுவிததகவலும் கிடைக்காததால் இம்மாதிரி முடிவுசெய்யப்பட வேண்டியதாயிற்று என்று கூட்டுக்கமிட்டியைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினார்.

இந்த இலாகாவைச் சேர்ந்த குமாஸ்தாக்கள், சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், மற்றும் சில்லறை ஊழியர்களும் மூன்று மாதங்களுக்குள் தாம் அரசாங்க சேவையில் இருக்க விரும்புகிறார்களா அல்லது மின்சார சபையில் சேர்க்கப்பட விரும்புகிறார்களா என்பதை அறிவிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

## கூட்டுத்தாபன வேலைநிறுத்த நிலைமையில் மாற்றமில்லை

கோட்டை, திங்கள்

கடற்றொழில் கூட்டுத்தாபனம், பெட்ரோலியம் கூட்டுத்தாபனம், டயர் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்கள் நேற்றும் எதுவித முடிவும் ஏற்படாமல் தொடர்ந்து நடைபெற்றன.

வேலைநிறுத்தங்களை முடிவுக்கு கொண்டுவரும்வகையில் நிர்வாகத்தின் சார்பிலோ தொழிற்சங்கங்களின் சார்பிலோ பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான முயற்சி ஏதும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள்பற்றி கைத்தொழில் அமைச்சும், தேசியமயசேவைகள் அமைச்சும் நேற்று ஆராய்ந்ததாகத் தெரிகின்றது. அதேசமயம் தொழிற்சங்கங்களும்தனியே கூடிநிலைமையைஆராய்ந்தன.

வழமைபோல் பெட்ரோல் குதங்களுக்கு எரிபொருள்கள் ராணுவத்தினுல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

டயர் கூடடுத்தாபனஊழியர்களை வேலைக்குத் திரும்பச் செய்வதற்காக நிர்வாகிகள் மேற்கொண்ட முயற்சி பயனளித்ததாகத் தெரியவில்லை. வேலைநிறுத்தம் நடைபெறும்போதே பேச்சுவார்த்தைகளைத் தொடர வேண்டுமென்று யூனியன்கள் வற்புறுத்தியதாகத்தெரிவருறது.

## பேராசிரியர் விலகுவது பற்றி மாணவர்கள் கவலை

கோட்டை, திங்கள்

பேராசிரியர் டபிள்யு. மயில்வாகனம் பதவியை ராஜினமாசெய்தது குறித்து பட்டதாரி மாணவர்கள் கவலையடைந்திருக்கிருர்கள். பேராசிரியரை மேலும் சில வருடங்களுக்குச் சேவையிலிருக்கவேண்டும் என்று அவர்கள் கோருவதாகத் தெரிகின்றது.

கல்வி முறையிலும், பாடத்திட்டங்களிலும் பெரும் மாறுதல்கள் செய்யப்படும் இந்த வேளையில் பேராசிரியர் மயில்வாகனம் விலகுவது விஞ்ஞான மாணவர்களுக்குப் பெரிய இழப்பாக இருக்குமென்று மாணவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கூறினர்.

பேராசிரியர் மயில்வாகனம் பதவியிலிருந்து விலகுவதற்கான காரணத்தை வெளியிடவேண்டுமென்றும் இவர்கள் கோரியிருப்பதாகவும் தெரிகின்றது.

## தெரிவு

சென்னை, செப் 20

தமிழ்நாடு ராஜ்ய சபை இடைத் தேர்தலில் தி. மு. கவைச் சேர்ந்த திரு. கலியாணசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார். எஸ். எஸ். வாசனின் மரணத்திஞல் இவ்விடம் காலியானது.

## மகாவலியை திருப்பும்வேலை
### 25ந் திகதி தொடங்கும்

கோட்டை, ஞாயிறு

மகாவலிகங்கையைத் திசை திருப்பும்முக்கியகட்ட வேலையை இம்மாதம் 25ந் திகதி காணிநீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா பொல்கொலையில் ஆரம்பித்து வைப்பார்.

25ந் திகதி காலையில் கண்டிக்கச்சேரியில் கண்டி, மாத்தளை மாவட்ட ஆட்சி மன்றப் பிரதிநிதிகளைஅமைச்சர் சில்வா சந்தித்து பொல்கொல வேலைபற்றி விளக்கிக் கூறுவார்.

## "சகல துருப்புகளையும் அமெரிக்கா திருப்பி அழைக்க வேண்டும்"
### —ஹனோய்

ஹனோய், செப். 21

தென் வியட்னமிலிருந்து அமெரிக்கா 35,000 துருப்புகளை திருப்பி அழைப்பது குறித்து ஹனோய் குறை கூறியுள்ளது.

தென்வியட்னமில் 5 லட்சம் துருப்புகள் இப்போது இருக்கின்றன வென்றும், 35, 000 துருப்புக்களை திருப்பி இழைப்பதென அமெரிக்கா தெரிவித்திருப்பது 'சுத்தப்புரளி' என்றும் இன்று ஹனோய் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. ளெல்லாம் அர்த்தமற்றதென்றும் ஹனோய் தெரிவித்துள்ளது.

---

கெய்ரோ, செப். 21

எகிப்தின் முன்னுள் பிரதமரான திரு. ஹப்ரி கட்சியில் முக்கிய இடமொன்றைப் பெறுவதற்கு இன்று தவறி விட்டார் என அறிவிக்கப்பட்டது.

## வீடு இல்லாதோருக்கும், ஹரிஜனர்க்கும்

# தொகுதிவாரியாகக் காணி வழங்கும் திட்டம் ஆரம்பம்

## யாழ். தொகுதியில் 28 ஏக்கர் காணி சுவீகரிக்க முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

வீடு இல்லாதவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் தொகுதிவாரியாக காணிவழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத் தொகுதியில் பண்ணைக்கருகில் 8 ஏக்கர் நிலமும், கோம்பையன் மயானத்திற்கு அருகில் உள்ள பொம்மைவெளி என்ற 20 ஏக்கர் வயல்நிலமும் சுவீகரிக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆட்சி மன்ற உறுப்பினரின் சிபார்சின் பேரில் ஒவ்வொரு தொகுதியிலும் 2லட்சம் ரூபா பெறுமதியான காலியாக உள்ள நிலத்தை வீடு இல்லாதவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் வழங்க ஏற்கனவே திட்டமிட்டிருந்தது

இத்திட்டத்தின்படியாழ்ப்பாணத் தொகுதியில் 28 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது பண்ணையில் கொட்டடிக்கு தெற்கிலுள்ள 8ஏக்கர்காணி சிறுபான்மைத் தமிழர்களுக்கு வழங்கப் படும். பொம்மைவெளி என்ற 20 ஏக்கர் காணியில் 10 ஏக்கர் முஸ்லிம்மக்களுக்கும் 10 ஏக்கர் நாவாந்துறை மக்களுக்கும்வழங்கப்படும்

கிளிநொச்சித் தொகுதியில் பத்து [illegible] தில் 15 ஏக்கர்காணியையும் கோப்பாய் தொகுதியில் புத்தூர்பகுதியிலுள்ள பனங்காணியைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிபார்சுசெய்த காணிகள் பற்றிய விபரங்கள் காணி கமிஷனருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நல்லூர் தொகுதியிலுள்ள கொக்குவிலில் சிதம்பரம் கோவிலுக்கு சொந்தமான ஒரு காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்ட போது இக்காணியின்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஓவியக்கலை தமிழரின் பழமையான சொத்து
### தமிழக அறிஞர் இராகவன் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செவ்

"ஓவியம் தமிழ் நாட்டிற்கு பழைமையான சொத்து மொழி, கலை, நாகரிகம் தோன்றுவதற்கு முன் ஓவியம் தோன்றியது ஆதிகால மனிதன் பேசுவதற்காக பயன் படுத்தப்பட்டது ஓவியம்."

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் திரு. ஆ தம்பித்துரை தலைமையில் நடந்த கூட்டத்தில் நேற்று மாலை, தமிழக அறிஞர் திரு. ஏ. இராகவன் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய ஓவியக்கலை என்னும் பொருள் பற்றி திரு. இராகவன் பேசும் போது மேலும் கூறியதாவது: 30,500 ஆண்டுகளுக்கு முன்னர் ஓவியம் மூலம் தான் ஆதிமனிதர் பேசியிருக்க வேண்டும் என்று ஐரோப்பியர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். முதன் முதலாக மனிதன் கண்ட கலை ஓவியக்கலைதான் ஓவிய எழுத்து பின் ஒலிவடிவு பெற்றது.

ஓவியக்கலை வரலாறு மிகவும் துக்ககரமானது. ஓவியக்கலை வெள்ளைக்காரர் வந்தபின் வளர்ச்சி பெறவில்லை. அதற்கு முன் வளர்ச்சி பெற்றதற்கு சான்றுகள் இல்லை. பழங்காலத்தில் தமிழர் ஓவியக்கலை பயின்றதற்கு சான்றுகள் இல்லை. ஓவியக்கலை உலகத்தில் எல்லாராலும் போற்றப்படும் கலை.

## யாழ்ப்பாணத்தில்

# டெலிவிஷன் மூலம் கல்வி போதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் பேசும் போது மேற் கண்டவாறு கூறினர்.

இந்திய ஓவியக்கலை என்னும் பொருள் பற்றி திரு. இராகவன் பேசும் போது மேலும் கூறியதாவது: 30,500 ஆண்டுகளுக்கு முன் ...கள் இல்லை. பழங்காலத்தில் தமிழர் ஓவியக்கலை பயின்றதற்கு சான்றுகள் இல்லை. ஓவியக்கலை உலகத்தில் எல்லாராலும் போற்றப்படும் கலை.

...கள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆட்சி மன்ற உறுப்பினரின் சிபார்சின் பேரில் ஒவ்வொரு தொகுதியிலும் 2லட்சம் ரூபா பெறு... காணியில் 10 ஏக்கர் மு...ம்மக்களுக்கும் 10 ஏக்கர் நாவாந்துறை மக்களுக்கும்வழங்கப்படும்

கிளிநொச்சித் தொகுதியில் யக்கச்சி என்ற இடத்

நல்லூர் தொகுதியி... கொக்குவிலில் சிதம்பரம் கோவிலுக்கு சொந்தமான ஒரு காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப் பட்ட போது இக்காணியின்

(4-ம் பக்கம் பார்க்க)

திருப்பி இழைப்பதென அமெரிக்கா தெரிவித்திருப்பது 'சுத்தப்புரளி' என்றும் இன்று ஹனேய் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

வியட்னாமிலுள்ள சகல அமெரிக்கத் துருப்புகளையும் அமெரிக்கா திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்படி அழைக்காத பட்சத்தில் அமெரிக்காவின் அறிவிப்புக

பெற்ரேலியம் கூட்டுத்தாபன வேலை நிறுத்தம்:

## தொழிற் சங்க பிரதி நிதிகளுடன் அமைச்சர் பேசுவார்

கோட்டை, ஞாயிறு

பெற்ரேலியம் கூட்டுத்தாபன ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காணும் பொருட்டு வரும் 23-ம் திகதி புதன்கிழமை மாலை அக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழிற் சங்க பிரதிநிதிகளுட தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா பேச்சு வார்த்தை நடாத்தவிருக்கிறார். அமைச்சர் இன்று தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு இவ் அழைப்பை விடுத்தார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற் சங்கங்கள், நிர்வாகம் தமது 15 கோரிக்கைகளை தந்தாலொழிய வேலைக்குத் திரும்பப் போவதில்லையென இன்று அறிவித்துள்ளன.

கடற் தொழில், டயர் கூட்டுத்தாபன தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள், சமரச பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன,

## கைதிகள் திடீர் மரணம்

கோட்டை, திங்கள்

வெலிகடைச் சிறைச்சாலைக்குள் இரு கைதிகள் திடீரென மரணமாகிக் கிடக்சக் காணப்பட்டார்கள். இது பற்றி விசாரணை நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில்

## சிறுபான்மை தமிழருக்கு வீடமைப்புத் திட்டம்

### கோவில் காணியை சுவீகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மைத்தமிழருக்கு வீடமைப்புத்திட்டமொன்றைநிறுவுவதற்காகயாழ்ப்பாணத்தில்ஒருகாணி சுவீகரிப்பதற்கானமுயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவில் உள்ள திருவளர்திடல் பள்ளி வெளித் தோட்டம் என்ற 80 பரப்பு காணியே வீடமைப்பு திட்டத்திற்காக சுவீகரிக்கப்படவிருக்கிறது.

இக்காணியின் வடக்குக்கம் புதியரோட்டும் கிழக்குப்பக்கம் சிவன் பண்ணை ரோட்டும், தெற்குப் பக்கம் காரைநகர் ரோட்டும் மேற்குப்பக்கம் மார்புநோய் சிகிச்சை நிலையரோட்டும்எல்லைகளாக அமைந்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் மற்றொரு காணியும் சிறுபான்மைத் தமிழருக்கான வீடமைப்பு திட்டத்திற்கு சுவீகரிக்கப்படவிருப்ப தாகத் தெரியவருகிறது.

## ஆசிரியதம்பதிக்கு சியவச பரிசு

கோட்டை, ஞாயிறு

சியவசசுவீப்பின் முதல் பரிசுத்தொகையான ஒரு லட்சம் ரூபாய் வலஸ்முல்லைகனுமுல்தெனியா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியை திருமதி பி.டி.குணவதிக்குக் கிடைத்திருக்கிறது. அவரது கணவருக்கும் அதேசுவீப்பில் ஆறுதற் பரிசான ஆயிரம்ரூபாய்கிடைத்திருக்கிறது.

யாழ்ப்பாணம்

## பெண்சாரணர் சங்கக்காரியதரிசிக்கு பாராட்டு பதக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பெண் சாரணர் சங்கத்தின் காரியதரிசியும், பெண் சாரணர்களின் மாவட்ட ஆணையாளருமான திருமதி ஆர். இ இராஜநாயகத்தின் சிறந்த சேவையை முன்னிட்டு அவருக்குப் பாராட்டுப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. இம் மாதம் 17-ந் திகதி கொழும்பில் நடைபெற்ற ஈராண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் இலங்கைப் பெண் சாரணர் சபையின் கருத்தரங்கில் திருமதி கோபல்லவா மேற்படி பாராட்டுப் பதக்கத்தை வழங்கினர்.

இச்சேவையில் 30 வருடங்களாக ஈடுபட்டுள்ள திருமதி இராசநாயகம் 1965-ம் ஆண்டு பிலிம்மைனர்தீவில் நடைபெற்ற உலக பெண் சாரண பயிற்சியாளர் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கானைப் பகுதியில்

## எட்டு மாதங்களில் 24 தந்திக் கம்பிகள் களவு

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த 8 மாதங்களுக்குள் 24 தந்திக்கம்பிக களவுகள் சங்கானைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளதாக வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மூளாய், வட்டுக்கோட்டை பெரியவிளான், புன்னாலை, இளவாலை ஆகிய இடங்களிலேயே இக்களவுகள் இரவு நேரங்களில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

களவுபோன தந்திக்கம்பிகளின்பெறுமதி சுமார்இரண்டாயிரம் ரூபாவரை இருக்கலாமென கணக்கிடப்பட்டுள்ளது,

இக்களவுகள் சம்பந்தமாக சில ஓய்வுபெற்ற தந்திப் பகுதி ஊழியர்கள் பொலிஸ் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனராம். (கா. நி.)

# டெலிவிஷன் மூலம் கல்வி போதனை

### கல்வி அமைச்சர் ஆலோசனை

காலி, ஞாயிறு

தொலைக்காட்சிகள் மூலம் கல்விப் போதனை நடைபெறுவதால் கல்வித்துறையில் பெரும் நன்மை விளையும் என்று கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மாணவர்களின் கல்வி நலனுக்காக விரைவில் இலங்கையில் டெலிவிஷன் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இது பற்றி எனது அமைச்சு ஆலோசனை நடத்தி வருகிறது. சில நாடுகளில் டெலிவிஷன் காட்சிகளால் ஒழுக்கம் கெடுகிறது. ஆனல் இங்கு அவ்விதம் நடைபெறுவதற்கு நான் அனுமதிக்கமாட்டேன்.

இப்பொழுது அரசாங்கம் 5 கோடி ரூபா வரை கல்விக்கு செலவிடுகிறது. இது தேசிய வருமானத்தில் ஐந்தில் ஒரு பகுதி. இன்னும் மேலதிகமாகச் செலவிட முடியாது. ஆசிரியர்கள் கல்வி வளர்ச்சியைக் கருதி நிதி சேகரித்து உதவ முன் வரவேண்டும்.

100 'சியவச' நூல்நிலையங்கள் கட்டுவதற்கு 40 லட்சம் ரூபா சேகரித்துக் கொடுத்த ஆசிரியர்களுக்கு நான் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையின் சரித்திரத்திரத்தில் இது மிக நல்லதொரு காலம் என்று குறிப்பிட்ட அமைச்சர் ஆங்கில பத்திரிகைள்மீது குற்றம் சாட்டினர்.

# பல்கலைக்கழகத்தைஎதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் கதைதான்

— கிளிநொச்சி எம். பி.

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ் மக்களின் முதலாவது எதிரி இன்றைய கல்வி கலாச்சார அமைச்சர் திரு. இரியகொல்லைதான். பிரதம அமைச்சர் திரு. டட்லி சேனநாயக்காவும் இவருக்கு குறைந்தவரல்லர். சிங்களம் மட்டும் அரசாங்க மொழி என்ற சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதனை ஆதரித்து வாக்களித்தவர்களில் திரு. டட்லியும் ஒருவர் என்பதைத் தமிழர்கள் மறந்துவிடமுடியாது.''

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினரான திரு. கா. பொ. இரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறையிலுள்ள பருத்தியடைப்பு என்ற இடத்தில் தமிழரசுக்கட்சிக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. திரு சி. வடிவேலு இக்கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்து திரு. கா. பொ. இரத்தினம் மேலும் பேசியதாவது:

''போராட்டமின்றியோ தியாகமின்றியோ தமிழர்கள் இழந்த உரிமைகள் எதையும் பெற்றுவிடமுடியாது. இன்றைய அரசாங்கம் தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகம் கொடுக்கும் என்று தமிழர்கள் காத்திருப்பது, இலவு காத்த கிளியின் கதையைப்போலத்தான் முடியும்.

பல்கலைக்கழக பிரச்னையை மையமாகவைத்து வடக்கு கிழக்குத் தமிழர்களையும், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களையும் பிரிக்கவே அரசாங்கம் முனைகின்றது. இனியும் அரசாங்கத்தை நம்பியிருப்பதைப் போல ஏமாற்றம் கொடுக்கும் விஷயம் வேறொன்றும் இல்லை''

பருத்தியடைப்பு தமிழரசுக்கட்சிக் கிளையின் நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு.சி.வடிவேலுவும், செயலாளராக திரு. தா. ஜெயராசாவும், உப செயலாளராக திரு. மு. பாலேந்திரனும், தனதிகாரியாக திரு வ. சிவநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வாலிப முன்னணிக் கிளை நிர்வாகிகள் தெரிவில் தலைவராக சி. சண்முகநாதனும், செயலாளராக வி. தயாநாதனும், தனதிகாரியாக த. குலநாதனும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (கா. நி)

## பாடசாலை கட்டடம் விஸ்தரிக்க நடவடிக்கை

முசலி, ஞாயிறு

நானாட்டான் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கம் தங்களின் பாடசாலை தரம் உயர்ந்ததன் காரணமாக, அப்பாடசாலைக்கட்டடத்தை விஸ்தரிக்க எண்ணியுள்ளது.

இதற்கான ஆக்க முயற்சியில் மன்னார் மாவட்ட கல்வி அதிபர் திரு வி. நடராஜாவும் மேற்படிகல்வித்தலைமையாசிரியர் திரு. ப. சந்தியாகுருஸும் ஈடுபட்டுள்ளார்கள்.

## இடமாற்றம்

மல்லாகம், ஞாயிறு

மயிலிட்டி கிராம சபையின் பிரதம லிகிதர் திரு. என். நடராசா அடுத்த மாதம் முதல் எருக்கலம்பிட்டி கிராம சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடமாற்றம் குறித்து மயிலிட்டி கிராம சபை ஊழியர்கள் பிரிவுபசாரம் நடத்தினர்.

வேலையற்ற பட்டதாரிகள்

## ''நடவடிக்கையின்றேல் மீண்டும் நேரடிப் போராட்டம்''

கோப்பாய், ஞாயிறு

அடுத்த மூன்றுமாதகாலங்களில் வேலையற்ற பட்டதாரிகள் பிரச்னை குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தவறின் மீண்டும் அரசாங்கத்திற்கு எதிரான வகையில் நேரடிப் போராட்டத்தில்இறங்குவது உறுதியாகிவிட்டது. இனிவரும் நேரடிப் போராட்டம் என்ன என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை. ஆனல் நடைபெறவிருக்கும் போராட்டம் அகில இலங்கையிலுமுள்ள வேலையற்ற பட்டதாரிகளைக் கொண்டதாகவே இருக்கும்.

இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் திரு கே. சதானந்தன் நமது நிருபரிடம் தெரிவித்தார்,

அவர் மேலும்கூறியதாவது.

சென்ற சில நாட்களின் முன்னர் நடைபெற்ற உண்ணவிரதப் போராட்டத்தில் கலந்து இப் பிரச்னையைத் தீர்க்க உறுதியளித்த உடுப்பிட்டி எம்.பி. திரு எம், சிவசிதம்பரத்துக்கும் சமாதானப் பேச்சு நடாத்தி ஆலோசனை கூறிய கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ். கதிரவேலுப்பிள்ளைக்கும் மற்றும் பிரமுகர்கட்கும் பொதுமக்களுக்கும் தமது நன்றியையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

# நவீன வசதிகளுடன் புதிய பொலிஸ் நிலையம்யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும்

### மாநகரசபையில் பிரேரணை வருகிறது

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்ருன யாழ்ப்பாண நகரிலுள்ள பொலிஸ் தலைமைக்காரியாலயம் சுகாதார வசதி குறைந்த பழைய காலக் கட்டடமாக விடுப்பதால் நவீன வசதிகள் கொண்ட புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை உடன்நிறுவுமாறு உள்நாட்டமைச்சரை வற்புறுத்துந் தீர்மானமொன்று .இம்மாதம் 24-ம் திகதி யாழ். மாநகரசபையில் கொண்டுவரப்படவிருக்கின்றது.

இப்பிரேரணைக்கான முன்னறிவித்தலை திரு. எஸ். ஜே. அன்ரனி கொடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவிப்புக் கொடுககப்பட்டிருக்கும் சில முக்கிய பிரேரணைகள் பின்வருமாறு.

தமிழ் மாத்திரம் தெரிந்த மக்கள் தங்கள் புகார்களை தமிழிலேயே பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்யக்கூடியதாக வசதி செய்து தருமாறு பிரதமரைக் கேட்பது.

அரசாங்க விற்பனை இலாகா விற்பனை செய்யும் மலிந்த உணவுப் பொருட்களை பாஷையூர், குருநகர், நாவாந்துறை மக்களும்வாங்கக்கூடியதாக இப்பகுதிகளில் விற்பனை நிலையங்களை நிறுவித்தருமாறு உணவு அமைச்சரைக் கேட்பது.

தொலைபேசிவசதி கேட்கும் மாநகர அங்கத்தவர்கட்கு முதன்மைகொடுத்து தொலைபேசித் தொடர்பு கொடுக்க வேண்டுமென தபால் தந்தி அமைச்சரைக் கேட்பது.

இலங்கையின் இரண்டாவது பெரிய ஆஸ்பத்திரியாக விளங்கும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மின்சாரம் தடைப்படும் காலங்களில் அவசர தேவைக்கான ஒரு மின்சார உற்பத்தி யந்திரம் அல்லது ஒரு பற்றறி சேவிஸ் விளக்கு பொருத்த ஒரு சிறு மின்நிலையம் ஆஸ்பத்திரி வளவுக்குள் பொருத்தவேண்டும்.

மொத்தம் 20 பிரேரணைகளை இக் கூட்டத்துக்குக் கொண்டுவர முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ளன. (கா-நி)

## முதலாவது மொழிஆய்வுகூடம்

பேராதனையிலுள்ள அரசினர் பயிற்சிக் கல்லூரியில் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொலை மொழிஆய்வுகூடமொன்றை ஆரம்பித்துவைத்தார். இந்த நவீன ஆய்வுகூடம் இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்டதாகும்.

## 9,000 பேருக்கு ஆசிரியர் பதவி

### 50,000 பேர் மனு

கோட்டை, ஞாயிறு

ஒன்பதாயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்குக் கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது இந்த ஒன்பதாயிரம் இடங்களுக்கும் ஐம்பதாயிரம் பேர் மனுச்செய்திருக்கின்றனர்.

1,500 பட்டதாரிகளையும் 2,000 ஆங்கில உதவி ஆசிரியர்களையும், 2,000 மாணவ ஆசிரியர்களையும் நியமிக்க கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது

இந்த ஆசிரிய நியமனத்துக்கு முக்கியத்துவமளித்து அவர்களைத் தெரிவுசெய்வதற்காக 20 நேர்முகப் பரீட்சைச் சபைகள் நிறுவப்பட்டிருக்கின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு வேலை செய்வதற்கு நன்கு பயிற்சி பெற்ற பெண்கள் உடன் தேவை. விபரங்கட்கு: அன்னம் சாறி வேக்ஸ், விக்னேஸ்வரா மேல்மாடி, பஸ்ரான்ட் முன்பாக, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1418

### விற்பனைக்கு

ஐந்தாம் வகுப்பு மூன்றும் தவணை உபயோகத்திற்கு புதிய பாடத்திட்டத்துக்கமைவான பயிற்சி வினுக்கள் வெளிவந்துவிட்டன. கணிதம், தமிழ், சூழல், சைவசமயம், ஆங்கிலம் ஒவ்வொன்றும் தனித்தனியாக அவற்றிலேயேவிடைஎழுதக்கூடியதாக திருமதி பத்மா சோமகாந்தன் நீண்டகால படிப்பித்தல் அனுபவங்கொண்டு தொகுத்துள்ளார். பாடத்திட்டம் முழுவதையும் அடக்கியுள்ள இப்பயிற்சி வினுக்கள் மாணவர்க்கு நல்ல மீட்டற்பயிற்சியுமாகி, பரீட்சையில் நல்ல தேர்ச்சி பெற நிச்சயம் உதவக்கூடியவை. ஒவ்வொரு பாடமும் தனித்தனி 70 சதம். தொகையாக வாங்குபவர்களுக்கு விற்பனைக் கழிவுண்டு. வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1420

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

### கேள்விப்பத்திரம்

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தெல்லிப்பளை மொத்த நிலையத்தில் 3500 சாக்குகளும், 35 அந்தர் கழிவு சீனியும் விற்பனைக்கிருக்கிறது.

கேள்விப்பத்திர மூலம் விண்ணப்பிக்கவும். கேள்விப்பத்திரம் சமாச அலுவலகம் சுன்னுக மொத்தநிலையத்தில் ரூபா 25/- கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 28-9-69 ஆம் திகதி 12 மணிக்கு மேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகக் காரியதரிசி.
வலி-வட. பல.நோ.
கூ. ச. சமாசம்,
சுன்னுகம்
1759

### ஒத்திவைப்பு

மல்லாகம், ஞாயிறு

மனைவியின் சகோதரியைக் காரில்கடத்திச்சென்றதாகச் சுன்னுகம் பொலிஸால் எஸ். பத்திநாதர் என்பவருக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு மேல்விசாரணையை அடுத்த மாதம் 12-ம் திகதிக்கு மல்லாகம் நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

இன்று மட்டும்
**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
ரிபோயா, போயா 2-30 மணி
என்டி ராமராவ்-சரோஜாதேவி
நடித்த
**சீதா ராம கல்யாணம்**

### மெக்கானிக்கர்கள் தேவை

வலிகாமம் வடக்குப் பல. நோ. கூ. ச. சமாசத்தால் அமைக்கப்படும் மின்தறி நிலையத்திற்கு இரண்டு மெக்கானிக்கர்கள் தேவை. கீழ்க்காணும் தகைமையுடையவர்கள் சமாசத்தின் நிர்வாகக் காரியதரிசிக்கு 5-10-69-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**தகைமைகள்**

1 வயது: 18-க்குக் குறையாதவராகவும், 30க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. தாரதரம்: ஜே.எஸ்ஸி. ஆங்கிலம் ஒரு பாடமாகச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. அனுபவம்: அங்கீகரிக்கப்பட்ட அல்லது பிரபல்யமான ஒரு கராச்சில் மெக்கானிக்கராகக் கடமை புரிந்தவராக அல்லது தொழில் நுட்பக் கல்லூரித் தராதரப்பத்திரமுடையவராக இருத்தல்வேண்டும்.

4. நல்ல தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: தெரிவுசெய்யப்படும் இருவரும் சமாசத்தின் செலவில் கொழும்பில் பயிற்சிபெற அனுப்பப்படுவர். பயிற்சிக் காலம் முடிந்ததும் தொழில் கொடுக்கப்படும்.

நிர்வாகக் காரியதரிசி
வலி-வட. பல. நோ.
கூ. ச, சமாசம்
சுன்னுகம்.
1760

### புதிய மரண விசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்

திரு. பொன்னம்பலவாணர் சித்தம்பலவாணர் பல்லவராயன்கட்டு பகுதிக்குச் சென்ற மாதம் 18-ந்திகதிதொடக்கம் சடுதி மரணவிசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### பட்டம் வழங்கினர்

மல்லாகம், ஞாயிறு

புலோலி கிழக்கு தமிழிசைச்சங்க 8-வது ஆண்டு விழாவில் நாட்டிய நிகழ்ச்சியளித்த குமாரி லீலா நாராயணனுக்கு 'நடன கலா ஜோதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. என். நடராசா, டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சாரணர் போட்டியில் சிதம்பராவுக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பழையபூங்காவில் நடைபெற்ற சாரணர் வருடாந்த போட்டியில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி சாரணர் 4 போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றதினுல் ரோட்டரி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டனர்.

பாசறைத்திட்டம், காட்சி, பாசறை பரிசோதனை, குழுப் பதிவேடுகள் ஆகிய நான்கிலும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டதற்காக நான்கு வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் மேற்படி பரிசுகளை வழங்கினுர்.

68-ம் ஆண்டின் மிகச் சிறந்த பாசறைக்குழு என்பதற்கான வெற்றிக்கிண்ணத்தையும் மேற்படி குழு கடந்த மாதம் மகாதேசாதிபதியிடமிருந்துபெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## ஜாதி என்பது தமிழுக்கு அந்நியச் சொல்

அராலி, ஞாயிறு

'அவதார புருடர் மகாத்மாகாந்தி மாட்டின்லூதர்குங் போன்ற மகான்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் மீட்சிக்காகப் போராடித் துப்பாக்கிக் குண்டுக்கிரையாகினுர்கள். ஜாதி என்ற சொல் தமிழுக்கு அன்னியச் சொல் ஜாதி என்ற ஒரு பாகுபாடு இல்லையென வள்ளுவர், நாவுக்கரசர், திருமூலர் சுப்பிரமணிய பாரதியார் போன்ற புலவர்கள் பாடித் தந்துள்ளார்கள்.'

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு அ. அமிர்தலிங்கம் அராலி வடக்கு சிறுபான்மைத் தமிழரின் பாரதி சனசமூகநிலைய 10-வது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறிஞர். அவர் மேலும் பேசுகையில் 'அண்ணன் அவமதிக்கிருனென்பதற்காக தம்பிதன் அன்னையாகிய தமிழை புறக்கணித்துவிட்டு சிறுமி சிங்களத்தோடு ஓட முயலக்கூடாது என்ருர்.

கூட்டம் மன்றத் தலைவர் திரு இ. அருணுசலம் தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. சுப்பிரமணியம் ஜே.பி, அராலிக் கிராமசபை தலைவர் திரு இ. நாகலிங்கம் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு எம். சி. சுப்பிரமணியம், அராலி கிழக்கு ச.ச. நிலையதலைவர் திரு சி. பொன்னம்பலம், திருமதி மங்[illegible]ற்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் பேசினர்.

திரு கே உருத்திராபதி நடராசாவின் இன்னிசைக் கச்சேரியும் அளவெட்டி ஜெயம் குழுவினரின் இசைக் கச்சேரியும், நகைச்சுவை நடிக[illegible]ங்கிரி சிவகுரு குழு

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: அ சு. குலவீரசிங்கம், உபதலைவர்: சு. சண்முகம், செயலாளர்: செ. வடிவேலு, உபசெயலாளர்: மா. பொன்னுச்சாமி தனுதிகாரி: க ஆறுமுகசாமி, நூல்நிலையப்பொறுப்பாளர். த. உலகநாதன், பால்நிலையப்பொறுப்பாளர்: மா. பொ. சாமி.

0 0 0

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு கிழக்கு மத்திய சனசமூகநிலைய நிர்வாகிகள் கூட்டம் கிழக்கு கி. மு. சங்க மண்டபத்தில் ஆசிரியர் திரு. நா. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளைத் தெரிவதென்று தீர்மானிக்கப்பட்டது.

பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு நா. கார்த்திகேசு, காரியதரிசி: திரு. இ. நடராசா, தனுதிகாரி: திரு. மு தளையசிங்கம். நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

### 750 ரூபா அபராதம்

மல்லாகம், ஞாயிறு

சுன்னுகம்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஏ. ஜேக்கப் தலைமையில் சென்றிரு[illegible] பொலிஸ் கோஷ்டியின் உரும்பராய் வீடு ஒன்றில் திடீர் வேட்டை நடத்தி சட்டவிரோத வடிசாராயம் வடி உபகரணங்கள் 8000 கலன் சட்ட விரோ

### தேவார எழுத்துப் போட்டி

வத்தளை, ஞாயிறு

வத்தளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை 'இந்து மாணவர் மன்ற'ச் சார்பில் இந்து மாணவர்களுக்கிடையே கடந்த வாரம் 'தேவார எழுத்துப்போட்டி' நடைபெற்றது. இந்துமாணவர் மன்றக் காப்பாளர் திரு. நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. பரிசு பெற்ருேருக்கு இவ்வாண்டு நடைபெறும் 'சைவத்திருநெறி விழா'வில் பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெற்ருேர் விபரம் வருமாறு:

மேற்பிரிவு: செல்வன்கள் செ ரூபசிங்கம், க பாஸ்கரன், செ சண்முகநாதன் செல்விகள் வாணி சிவதாசன், வசந்தி கணேசலிங்கம், ஜானகிலீலா வெள்ளிமுத்து. செல்வன்கள் ச யோகநாதன், செ பிரேமகுமார் ஆகியோர் பாராட்டுப்பத்திரம் பெற்றனர்.

மத்தியபிரிவு: செல்வி உதயராணி பொன்னுத்துரை, செல்வன் தே தேவபாலா, செல்வி காந்தி கந்தசாமி.

பாராட்டுப்பத்திரம் பெறுவோர்: செல்வன் அ ரவீந்திரன், செல்விகள் சியாமளா அம்பலவாணர், கல்யாணி சிவதாசன், ஞானமணி ஞானசேகரம், நாகாந்திமதி நாகப்பன்.

கீழ்ப்பிரிவு: செல்வி சாந்தா சிவதாசன், செல்வன் ந ஸ்ரீகாந்தா, செல்வி அம்பிகாவதி வடிவேலு

பாராட்டுப்பத்திரம் பெறுவோர்: செல்விகள் ஜானகி மகாலிங்கம், சரஸ்வதி இராசையா, ஆனந்தி அம்பலவாணர், செல்வன்கள் கோ யோகேஸ்வரன், ந யோகநாதன்.

### புதிய ஜே. பி.

மல்லாகம், ஞாயிறு

சுன்னுகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ரி. தம்பிரத்தினம் நீதி அமைச்சினுல் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டமை குறித்து தேநீர் விருந்துபசாரம் நடாத்தினுர், வட்டுகோட்டை எம் பி திரு ஏ அமிர்தலிங்கம் உடுவில் எம் பி திரு. வி தருமலிங்கம், நீதிபதி திரு எம் சண்முகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர்

## 'கிராம முன்னேற்றத்துக்கு சிறந்த தொண்டர் தேவை'

அளவெட்டி, ஞாயிறு

''எமது நாடு விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளில் முன்னேறவேண்டுமென்பதற்காக, கிராம அபிவிருத்திப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது கிராமத்தை முன்னேற்றச் சிறந்த தொண்டர்களைத் தெரிந்து கிராம அபிவிருத்திக்கு உதவவேண்டும்.''

இவ்வாறு கீரிமலை சிறுப்பர் மண்டபத்தில் கிராம அபிவிருத்திக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசிய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெ எம் சபாரத்தின கூறிஞர்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களிலிருந்து 200க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் வடமாகாண விவசாய உதவி அதிகாரி திரு. ரி. என். மாணிக்கவாசகர் பேசுகையில் ''பனை விதைகளை நாம் தரிசு நிலங்களில் விதைத்தால் அது பெரிய மரமாக வளர்ந்து எமக்கு நல்ல பலனைத் தரும். அத்துடன் மழையையும் உண்டாக்கக்கூடியது. ஆகவே யாவரும் பனை விதைகளை நாட்டவேண்டும்'' என்ருர்.

கமத்தொழிற் துறையைச் சேர்ந்த திரு சிவகுரு பேசுகையில் ''நெற்காணிச் சட்டத்தின்கீழ் பயிர்ச்செய்கைக் குழுக்கள் தற்போது கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் குளங்களைப் புதுப்பித்து நெல் செய்ய உதவுவதோடு உப உணவு உற்பத்தியையும் பெருக்க உதவும்'' என்ருர்.

ஏழாலை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. இ. பாலசுப்பிரமணியம் பேசுகையில் ''பயிர்ச்செய்கைக் குழுக்கள் நெற்காணிக்கு மாத்திரம் சேவை செய்ய இயங்காது, உப-உணவு உற்பத்திற்கும் உதவவேண்டும் என்றும் பனைகள் தறிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனவும் கேட்டுக்கொண்டார்.

அப்போது மேலதிக அரசாங்க அதிபர் பெண் பனைகள் தறிப்பதைத் தடுககச் சட்டம் இருக்கிறது என்றும் எங்காவது பெண் பனைகள் தறிக்கப்பட்டால் அப்பகுதிக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அதைச் சுட்டிக்காட்டினுல் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறிஞர்.

வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ், கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஆர். பரராசசிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

வெளிமடை, ஞாயிறு

வெளிமடை அரசினர் ஆஸ்பத்திரியில் நீர் தட்டுப்பாடு காரணமாக நோயாளர் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

பல காலமாக இவ்வித கஷ்டத்தை நோயாளிகள் இங்கு அனுபவித்துவருகின்ருர்கள்.

**விஞப்பத்திரங்கள்**
வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை
1. ஐந்தாந்தர கணிதவிஞப்பத்திரங்கள் ச 60
2. ஐந்தாந்தர இந்துசமய விஞப்பத்திரங்கள் ச. 60
3. ஐந்தாந்தர சூழல் விஞப்பத்திரங்கள் ச 70
4. ஐந்தாந்தர தமிழ் விஞப்பத்திரங்கள் ச 70
5. ஐந்தாந்தர ஆங்கிலம் விஞப்பத்திரங்கள் ச. 70
செல்வி பாத்திமா அப்துல் காதர் எழுதியவை
6. ஐந்தாந்தர இஸ்லாம் விஞப்பத்திரங்கள் ச. 60
7. ஆருந்தர இஸ்லாம் விஞப்பத்திரங்கள் ச. 75
இவ்விஞப்பத்திரங்கள் அரசாங்க திணைக்களபாடத் திட்டத்தினையடக்கி, புதுமுறை விஞக்களாக ஆக்கியவையாகும். வித்தியாபகுதியினரது பரீட்சைக்கும் N. P. T. A. பரீட்சைக்கும் மிக உபயோகமானவை. விற்பனையாளருக்குக் கழிவுண்டு.
வி. பி கவனிக்கப்படும்.
விற்பனையாளர்:
அன்பு புத்தகசாலை, 27 D பெரியகடை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

80வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
**குழந்தைக்காக**
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!
மாதர்களுக்கு அரைக்கட்டணம்.

**யாழ் - வின்ஸர்**
தினசரி — 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்
நடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி — 4 காட்சிகள்

★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா

நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்

நடிக்கும்

புதியபூமி

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா

சௌகார் ஜானகி

நடித்த

எங்க ஊர் ராஜா

அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் காண்பிக்கப்படும்.

Also Showing

APOLLO-11 in color-for 15 minutes,

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்) 2-30 6-30 -930

திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி

பாலையா ★ பேபி ரோஜாரமணி

மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். அளிக்கும்

பக்த பிரகலாதா

[ஈஸ்ட்மன் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)

ஆகிய திரைகளில்

ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்‌ஷனில் உருவாகி

ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ

நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி

வசந்தா ★ மனோகர்

நடித்த

ஐரிஸ் மூவிஸாரின்

நீயும் நானும்


திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. என். நடராசா, டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 22—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற் சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிளாரினட், 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.


வல்வெட்டித்துறை

ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30.

ரிபோயா, போயா காலை 10-30

ஜெய்சங்கர்-எல். விஜயலக்ஷ்மி

நடித்த

உயிர் மேல் ஆசை

MANOHARA

JAFFNA

Daily 4-45, 7, & 9-45p.m

Jules Buck-Peter O'toole

Production of

George Bernade Shaws

GREAT CATHERINE

(Technicolor)

REGAL JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45p.m

Gina Lollobrigida,

Elke Sommer

in

BAMBOLE

(Adults only)


கம் உட்பட பலர் பேசினர்.

திரு கே உருத்திராபதி நடராசாவின் இன்னிசைக் கச்சேரியும் அளவெட்டி ஜெயம் குழுவினரின் இசைக் கச்சேரியும், நகைச்சுவை நடிகர் டிங்கிரி சிவகுரு குழுவினரின யாருக்குஞ் சொல்லாதே என்ற நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றன.

## வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கலின் வளர்ச்சி மன்றத்தினரின் 'வாக்குறுதி' என்ற நாடகம் வரும் 24-ம் திகதி யாழ். நகர மண்டபத்தில் மேடையேற்றப்படவிருக்கிறது. திரு கனகசபை கயிலைநாதன் தலைமைவகிப்பார்.

தலைமையில் சென்றிருந்த பொலிஸ் கோஷ்டியினர் உரும்பராய் வீடு ஒன்றில் திடீர் வேட்டை நடத்தி சட்டவிரோத வடிசாராயம் வடி உபகரணங்கள் 8000 கலன் சட்ட விரோத கோடா முதலியவற்றைக் கைப்பற்றி அவ் வீட்டிலிருந்த நல்லையா, வேலாயுதபிள்ளை, ரத்தினகாந்தி என்ற மூன்று நபர்களையும் கைது செய்து அவர்களுக்கெதிராக தொடர்ந்திருந்த வழக்கில் நல்லையா குற்றத்தை ஒப்புக் கொள்ளவே மல்லாகம் நீதிபதி திரு எஸ். ஆனந்த குமாரசாமி அவருக்கு 750 ரூபா அபராதம் விதித்து மற்ற இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பதி திரு எம் சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினர்


அன்பு புத்தகசாலை, 27 D பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 6-ந் திகதி (22-9-69)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- தங்கக்குணம் மேலிடும், தக்க மதிப்பும் கிடைக்கும். தாய்வழிச்சுகம் உண்டு. இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும். முன்னேற்றமான தினம்.

**ரிஷபம்**- லட்சண லக்கின ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள் புத்திரர் புகழும் உண்டு.

**மிதுனம்**- திரைமறைவில் சதித் திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடல் தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும். சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

**கடகம்**- வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். திருமணப் பேச்சுவார்த்தைகளும் இன்று இடம்பெறலாம். குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும் பெரியோர் ஆசியும் உண்டு.

**சிம்மம்**- அவசரமுடிவு, அதன்வழி துன்பமும் உண்டு சிலருக்கு ஆயுதபீடைகளும் தாக்கும் வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவும். மௌனம் விரும்பத்தக்கது.

**கன்னி**- புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். பெரியோரின் ஆதரவு கிடைக்கும். குடும்ப வாழ்க்கை இன்று கற்கண்டுபோல் இனிக்கும்.

**துலாம்**- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு இன்று நல்லநாள். கல்வி பயிலுவோருக்கு உற்சாகதினம்.


**விருச்சிகம்**- எதிர்பார்த்த நற்செய்தி இன்று கிடைக்கும். பொருளாதாரத்துறையிலும் முன்னேற்றம் காணப்படும். எதிர்பாராத பொருள்வரவுக்கும் இடமுண்டு

**தனுசு**-செய்தொழிலில் தடுமாற்றநிலை தென்படும். வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ளநேரிடும். குடும்பத்தில் சிறுபிணி தோன்றும். மனத்திடன் விரும்பத்தக்கது.

**மகரம்**- கருத்துவேற்றுமைகள் கலகத்திற்கு இடமளிக்கும். புதிய இடத்தில் இருந்து பகை தலைதூக்கலாம். மௌனமும் தெய்வபக்தியும் நன்று. சகோதரங்களுக்கு நற்காலமாகாது.

**கும்பம்**- ஊதியம் வளரும் உற்சாகம் பெருகும். உறவினர் வாழ்த்தும் இதயத்தில் இன்பம்சேர்க்கும். புதினம் ஒன்று செவிகளில் வந்து மோதும். கல்வி பயில்வோருக்கு கணிசமான நாள்.

**மீனம்**- எதிர்பாராத பிரயாணம் இன்று ஏற்படலாம். பழைய சிநேகிதர் ஒருவரான் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும். சகோதரர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும்.


ராணிக்கு ஒரு தோழி!

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

ராணி சந்தன சோப், சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்

சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமதாபாத் கலவரங்களில் 28 பேர் பலியாகினர்

## நிலைமையைக் கட்டுப்படுத்த ராணுவம் அழைப்பு

புதுடில்லி, செப்டம்பர் 21

**ஆமதாபாத்தில் நேற்று மீண்டும் இனக்கலவரங்கள் வெடித்ததைத் தொடர்ந்து நகரில் அமைதியை நிலைநாட்ட ராணுவத்தை அழைப்பதென்று குஜராத் மாநில அரசு முடிவுசெய்திருக்கின்றது.**

**கடந்த மூன்று நாட்களாக ஆமதாபாத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.**

இன்று காலையிலும் இரண்டுதடவைகள் குழப்பக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் குழப்பங்களில் ஈடுபடுபவர்களையும், கொள்ளையடிக்க முயற்சிசெய்பவர்களையும் கண்டவுடன் சுட்டுத்தள்ளுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுவரை குழப்பங்களிலும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்களிலும் 28 பேர் பலியாகி இருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன. 200 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

கடந்த மூன்றுதினங்களாக ஆமதாபாத்தில் வகுப்புக்கலவரங்கள்நடைபெற்று வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு குஜராத் பொலிஸார் பலதடவைகளில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். இதுவரை சுமார் 150 தடவைகளுக்கு மேல் தீயணைக்கும் படையினருக்கு அறிவிப்புகள் வந்துள்ளன.

ஆமதாபாத்தில்அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச்சட்டம் அதன் புறநகர்ப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வன்முறைகளிலும், துப்பாக்கிச் சூட்டிலும் எத்தனைபேர் கொல்லப்பட்டார்கள் என்பது சரியாகத்தெரியவில்லை. குழப்பங்களில் ஈடுபடுகிறவர்களையும், கொள்ளையடிப்பவர்களையும் கண்டவுடன் சுடும்படி குஜராத் அரசு உத்தரவிட்டிருக்கின்றது. 500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுவரைக்கும் குழப்பக்காரர்கள் மூன்று ரயில்வண்டிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் குறைந்தது 75 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்

### பிரதமர் கவலை

குஜராத்தில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்கள் பற்றி பிரதமர் இந்திரா பெரிதும் வேதனை அடைந்திருக்கிறார். அமைதியாக விருக்கும்படி அவர் மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். வகுப்பு ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகாத்மா காந்தியின் நூறாவது ஆண்டு விழா கொண்டாடப்படும் இச்சமயத்தில் இப்படி வகுப்புக்கலவரம் ஏற்பட்டிருப்பது மிகவும் வேதனையளிப்பதாய் இருக்கின்றது என்று திருமதி காந்தி கூறியிருக்கிறார். நகரின் நல்ல பெயரைக் காபபாற்றும்படி ஆமதாபாத் மக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பெரியாரின் 91 வது பிறந்தநாள் விழா

சென்னை, செப். 21 கண்டு இவர்கள் எதற்கும்

## இந்தியாவுக்கு இடமில்லையா?

### மலேஷியா கண்டனம்

கோலாலம்பூர், செப் 21

அல்-அக்ஸா மசூதி எரிக்கப்பட்டது சம்பந்தமாக ரப்பாத்தில் நடைபெறவிருக்கும் முஸ்லிம் நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா அழைக்கப்படாதது குறித்து மலேஷியா கண்டனம் தெரிவித்திருக்கிறது. பல அரபு நாடுகளை ஒன்று சேர்த்துப் பார்த்தாலும் அவைகளிலுள்ள முஸ்லிம்களைவிட அதிகமான முஸ்லிம்களைக் கொண்ட நாடு இந்தியாவென்று மலேஷியா தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

---

## ஸ்ரீலங்கா தேர்தலுக்கு தயார்?

—ஸ்ரீமாவோ

அலவாவ, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடுத்தபொதுத்தேர்தலுக்கு தயாராகவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இங்கு நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்,

அடுத்த பொதுத்தேர்தலுக்கு சுதந்திரக்கட்சி நல்ல

## சாம்ராஜ்ய மகாநாட்டுக்கு இலங்கை எம். பி. க்கள்

லண்டன், செப் 21

சாம்ராஜ்ய பாராளுமன்ற சங்கத்தின் 15வது வருடாந்த மகாநாடு அடுத்த மாதம் ரினிடாட்டில் நடைபெறவிருக்கிறது. இந்தமகாநாட்டில் 42 சாம்ராஜ்ய பிரதேசங்களைச் சேர்ந்த 160 பாராளுமன்ற அங்கத்தவர்கள் பங்குபற்றுவார்கள், இலங்கைப் பிரதிநிதிகளாக டாக்டர் என். எம். பெரேரா, திரு. பெர்னுட் சொய்ஸா, திரு. சந்திரா கருணாரெத்தின, செனட்டர் எஸ். எம். எச். மசூர், பிரதிநிதிகள்சபை லிகிதர் திரு. எஸ். எஸ். விஜயசிங்க ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

இம்மகாநாடு அக்டோபர் 13ந் திகதியிலிருந்து 17ந் திகதிவரை நடைபெறும். ரினிடாட்டின் மகாதேசாதிபதி சேர் சொலமன் ஹொக்ஹோய் இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார். 'பாராளுமன்ற ஜனநாயகத்தின் எதிர்காலம்', 'சாம்ராஜ்யத்தின் எதிர்காலம்', 'சாம்ராஜ்யமும் உலக பந்தோபஸ்தும்', 'குமுறும் இளைஞர் சமுதாயம்' போன்ற பல்வேறு விஷயங்கள்பற்றி இந்த மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

10 பேர் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்ற தூதுகோஷ்டி ஒன்று இந்த மகாநாட்டில் பங்கு பற்றும். பிரிட்டிஷ் வெளிவிவகார சாம்ராஜ்ய ராஜாங்க மந்திரி செப்பேர்ட் பிரபு இந்த தூதுகோஷ்டிக்குத் தலைமை வகிப்பார். இந்த மகாநாட்டில் பல பார்வையாளர்களும் கலந்து கொள்கிறார்கள். இவர்களில் நால்வர் அமெரிக்க காங்கிரஸ் சபையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு மந்திரிகள் ஆலோசனை

நியுயோர்க், செப்21

ஐ. நா. மகாசபைக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருக்கும் பெரியநாடுகள் பலவற்றின்வெளிநாட்டுஅமைச்சர்கள் உலகப்பிரச்னைகள் பலவற்றையும் பற்றி சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளனர்.

பிரிட்டன். அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கு ஐ, நா. தலைமைக் காரியதரிசி விருந்தொன்று நடத்தினார்.


பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஸ்டுவர்ட் பிரஞ்சு ரஷ்ய வெளிநாட்டு மந்திரிகளை சந்தித்துப் பேசி[illegible]

### மந்திகை ஆஸ்பத்திரி நோயாளர் கஷ்டம்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையைச் சேர்ந்தமந்திகை அரசினர் வைத்தியசாலையில் இரு நூறுக்கு மேற்பட்ட இருபாலாரையும் சேர்ந்த நோயாளிகளுக்கு இரண்டேயிரண்டு மலசல கூடம் மட்டும் இருக்கிறது.

இம்மலசல கூடங்களுக்கு எவ்வித வெளிச்ச வசதியுமில்லை நோயாளர் இரவு நேரங்களில் மெழுகுவர்த்தியுடனேயே மலசல கூடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இவ்விடயம்பற்றி [illegible]



## மிருதங்க இசை விழா

யாழ்ப்பாணம், திங்கள்

மிருதங்க வித்வான் என். எம். செல்வத்துரையின் மாணவர்கள் அளிக்கும் மிருதங்க இசைவிழா ஒன்று இம்மாதம் 27ந் திகதி திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கிறது. நந்தி இசை மன்றம் இவ்விழாவை நடத்துகின்றது.

...... (கா. நி)

## 'இளம் பிள்ளை வாதம்'

### பெற்றோருக்கு வேண்டுகோள்

சித்தன்கேணி, ஞாயிறு

''இளம் பிள்ளை வாதம்' என்னும் கொடிய நோய் எமது பிள்ளைகளில் பெரும் பகுதியாேனாரைச் சென்ற ஆண்டுகளில் பாதித்தமையையும், அதன் காரணமாக அநேக குழந்தைகள் அங்கவீனர்களானதும், சில குழந்தைகள் உயிரிழந்தமையும் யாவரும் அறிந்ததே. பெற்றோர் தம் குழந்தைகள் யாவருக்கும் இளம் பிள்ளை வாத நோய்த் தடை மருந்தைப் பெற்றுக் கொடுத்து இந்நோய் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவர்கள் கடமையாகும்.''

இவ்வாறு கூறும் வேண்டுகோளை வட்டுக்கோட்டைப் பொதுசன சுகாதாரப் பரிசோதகர் திரு. வே. இரத்தினமும், வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். நிற்சிங்கமும் சேர்ந்து விடுத்துள்ளனர்.

''இந்நோய் எமது குழந்தைகளைப் பாதிக்காதிருப்பதற்காக வருடாவருடம் தடை மருந்து கொடுக்க வேண்டுமெனச் சுகாதார இலாகா நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளே இந்நோயினால் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றமையால் இம்முறை 2 மாதத்திற்கும் 5 வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளுக்கும் இம்மருந்தைக் கொடுக்கவும்'' என்

## ''நீர்வேலிக் கிராமசபையை பொறுப்பேற்கவும்''

உடும்பராய், ஞாயிறு

நீர்வேலிக் கிராமசபைக்கு சொந்தமான பணம் வீணாக விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆயுள்வேத வைத்தியசாலைக்குத் தேவையான மருந்துகள் தவறான வழியில் வாங்கியதாகவும் குற்றம் சாட்டி மகஜர் ஒன்றை நீர்வேலி கிராமசபையின் 8 அங்கத்தவர்களில் நான்கு பேர் கைச்சாத்திட்டு உள்ளூராட்சி அமைச்சருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

கிராமசபைப்பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகிக்கவிருக்கும் திட்டத்தில் பலத்த பணமோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் மின்சார விநியோகம் இதனால் காலதாமதமாக்கப் பட்டுள்ளதென்றும் கிராம சபையின் நிதிநிலை மிகவும் சீர்கெட்டிருப்பதாகவும் அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் சபையின் வரியிறுப்போர் நன்மையைக் கருதி நிர்வாகப் பொறுப்பை உள்ளூராட்சி அமைச்சை ஏற்றுக் கொள்ளும்படியும் கோரப்பட்டுள்ளது.

வடபகுதி உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கும் இதுபற்றிய மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 'நாட்டின் அபிவிருத்திக்கு நீரும்மின்சாரமும் முக்கியம்'

— உள்ளூராட்சி அமைச்சர்

மாத்தறை, ஞாயிறு

'தண்ணீர் மின்சார வசதியுடன், ரோட்டுகள், பாலங்கள் போன்றவையும் எல்லாக் கிராமங்களுக்கும்இருக்குமானால், நாடுஅபிவிருத்தியடைவதற்கு எவ்விதத்தடையும் இருக்கமாட்டாது. வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பிரச்னைகள் கூட இலகுவாகத் தீர்க்கப்பட்டுவிடும்' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா தெவிநுவர தொகுதியிலுள்ள டிக்வெல கிராமசபை மின்சார திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

கிராமசபைக்கான தொலைபேசித் தொடர்பையும் அமைச்சர் திறந்துவைத்தார்.

பாகுபாடற்ற முறையில் தேசிய அரசாங்கம் சேவை செய்துவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

நாட்டிலுள்ள வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னையைக் குறிப்பிட்ட அமைச்சர், 5 லட்சத்திற்கு மேலான இளைஞர்கள் வேலையில்லாதிருப்பதாகவும், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் இப்பிரச்னையைத் தீர்க்க முடியுமென்றும் கூறினார்.

## 'கல்வி, சுகாதாரம் குடிநீா வசதிகள் ஏற்படவேண்டும்''

அராலி, ஞாயிறு

''எமது சமூகத்தைப் பொறுத்தவரை நாம் எவ்வளவோ முன்னேற்றப் பாதையில் உயர்ந்துவருகின்றோம். இன்னும் பல பிரச்னைகள் தீர்க்கப்படாமல் நமக்குண்டு. எமது பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்கப் பெரும்பான்மைச் சமூகப் பெரியார்கள் பலர் முயற்சி செய்கிறார்கள் என்பதை நாம் மறைக்கக் கூடாது. அவர்களின் நல்லெண்ணம், ஒத்துழைப்பு இல்லாமல் நாம் தனித்து முயற்சிசெய்வதில் வெற்றி இலகுவில் கிட்டாது. கல்வி சுகாதாரம், குடிநீர் வசதி, குடி நிலம் போன்ற எல் சீராயமைய நாமும் முயற்சிகள் செய்யவேண்டும். சனசமூக நிலையங்கள் இவற்றைப் பெற ஆவனசெய்ய முன்வரலாம்.''

இவ்வாறு அராலி வடக்கு பாரதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்குகொண்டு சிறப்புரையாற்றிய அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரையாற்றும்போது கூறியதாவது:

''உங்கள் மறைந்த தலைவர் திரு. கு. இல்லையம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியாரின் 91 வது பிறந்தநாள் விழா

சென்னை, செப். 21
ராமசாமிப் பெரியாரின் 91-வது பிறந்த தினவிழா தஞ்சையில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பெரியாரை அலங்கரிக்கப்பட்ட தேரில்வைத்து ஊர்வலமாக அழைத்துச்சென்றார்கள். இந்த ஊர்வலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி உட்பட மற்ற மந்திரிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டார்கள்.

பெரியாரின் உருவச் சிலையை முதலமைச்சர் திரு. மு கருணாநிதி திறந்துவைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு கல்விஅமைச்சர் திரு.நெடுஞ்செழியன் தலைமைவகித்தார்.

திரு. கருணாநிதி பேசியதாவது: செப்டம்பர் 17-ம் திகதி பெரியார் பிறந்தநாள் மட்டும்அல்ல. தி. மு. கழகம் செப்டம்பர் 19-ந் திகதி தான் பிறந்தது.

இரண்டாவதாக எனக்கும் (கருணாநிதி நெடுஞ்செழியனுக்கும் ஊடல் என்று கூறினார்கள். எங்களுக்கு என்றுமே ஊடல் ஏற்பட்டதில்லை.

கழக வளர்ச்சிக்காக கருத்துக்களை பரிமாறிக்கொணடோமேதவிர ஊடல்அல்ல, இது ஒரு மாடல்.

பெரியாருக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட பிளவு விரிய விரிய எதிர்க்கட்சியினருக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அவர்கள் எண்ணத்தில் மண்விழுந்துவிட்டது. நாங்கள் பெரியாரால் வந்தவர்கள். பெரியார் எங்களைத் தந்தவர் நாங்கள் ஈரோட்டு பள்ளியில் படித்தவர்கள் பகுத்தறிவு பாசறையில் வளர்ந்தவர்கள் ஆனால் மற்றவர்கள் பெரியாரால் ஆதரிக்கப்பட்டவர்கள் அவ்வளவுதான்.

13-ம் இலக்கம் கெட்ட எண் என்று சொல்வார்கள். ஆனால் எனது மந்திரி சபையில் 13 அமைச்சர்கள்தான் இருக்கிறார்கள். இதைக் கண்டு இவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள் போலிருக்கிறதே என்று பெரியார் மகிழ்ச்சிஅடைவார்.

இதுபோல விழா ஒவ்வொரு ஆண்டும் நடந்தால் பெரியாருக்கு ஒவ்வொரு வயதாகக்குறைந்து இளமையுடன் தோன்றுவார். அவர் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வயது குறைந்து சின்னஞ்சிறு குழந்தையாகிவிடுவார். அந்த அளவுக்கு மக்களின் மதிப்பைப் பெற்றவர் பெரியார்.

பெரியார் தன்னலமற்ற தியாகி தமிழக அரசு அவரால் உருவானது. எனவே தமிழக அரசின் சார்பில் அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

## நெடுஞ்செழியன் பேச்சு

இந்த விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் பேசியதாவது.

ராஜராஜன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் வெற்றிவாகைசூடி வலம்வந்த வீதியில் இன்று பெரியார் அவர்கள் ஊர்வலம் வந்துஇருக்கிறார். தஞ்சை மணிக்கூண்டுக்கு எதிரே அவரது உருவச் சிலையை முதல் அமைச்சர் கருணாநிதி திறந்துவைத்து இருக்கிறார். அங்கு பெரியாரின் சிலை எதிரே அமர்ந்து கொண்டு அண்ணா பாடம் படிப்பதாக சிலை உள்ளது. நாங்கள் அண்ணாவிடம் பாடம் படித்து அமைச்சர்களாகிஉள்ளோம்.

---

## விமானங்கள் மோதின
### 64 பேர் பலி

சைகோன், செப். 21
இரண்டு விமானங்கள்ஒன்றோடொன்று மோதுண்டதால் அவற்றில் பிரயாணஞ் செய்த 64 பேர் கொல்லப்பட்டனர். சைகோனுக்கு வடகிழக்கே இவ்விபத்து நடந்தது.

சிசிரியன், அமெரிக்க விமானப்படைகளே மோதுண்டதாக அறிவிக்கப்பட்டது.

---

## இலங்கை வரும் பிரி. நிபுணர்

லண்டன், செப் 21
இலங்கை அரசாங்கத்தின் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திற்கு ஆலோசனை கூறும் பொருட்டு பிரிட்டிஷ் நிபுணர் ஒருவர் அடுத்த மாதம் இங்கு வருகிறார். 'கொன்சல்டிங் குரூப் லிமிட்டெட்' எனப்படும் பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனம் ஒன்றில் திட்ட அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. ஹென்றி ஹோரே இலங்கையில் ஒரு வருட காலம்வரை சேவையாற்றுவார். கொழும்புத் திட்டத்தின் தொழில்நுட்பக் கூட்டுறவு அமைப்பின்கீழ் இவர் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் சேமிபுக் குதங்களை நிர்வகிப்பது பற்றி இவர் ஆலோசனை வழங்குவார். தானியங்களைச் சேமித்து வைப்பதில் கையாளப்படும் புதிய உத்திகள், சேமிப்புப் பொருட்களைக் கட்டுப்படுத்தி வைக்கும் முறைகள், ஸ்டோர்ஸ் நிர்வாகம்பற்றி பயிற்சி அளித்தல் ஆகியன சம்பந்தமாக இவர் இலங்கை அரசாங்கத்திற்கு சிபார்சுகள் செய்வார்.

---

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயககா இங்கு நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்,

அடுத்த பொதுத்தேர்தலுக்கு சுதந்திரக்கட்சி நல்ல முறையில் தயாராகிவிட்டதாகவும், நாடெங்கிலும் வாலிப முன்னணிகள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளனவென்றும் அவர் கூறினார்.

---

## 5500 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

கோட்டை, ஞாயிறு
இவ்வருட இறுதிக்குள் 5,500 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்க இலாகாக்கள், கார்ப்பரேஷன் ஆகியவற்றில் இவர்களுக்கு வேலை வழங்க அரசு ஆவன செய்கிறது. கார்ப்பரேஷன்களிலும், அரசாங்க இலாகாக்களிலும் காலியாக உள்ள பதவிகள் குறித்து விபரங்களை அரசு கோரியுள்ளது. அடுத்த மூன்று மாதக் காலத்திலும் இந்த வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்களெனத் தெரிகிறது

---

## கோரிக்கை

கோட்டை, ஞாயிறு
உள்ளூராட்சி மன்ற சேவைக்கமிஷனின் ஒழுங்கு விசாரணைகள் நடத்துவதற்கான குழுவில் இலங்கை சிவில் சேவை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றியவர்களே நியமிக்கப்படவிருக்கிறார்களென்றும்இவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் இது தமக்கு அதிருப்தியை கொடுப்பதாகவிருப்பதாகவும் இப் பகுதிகளுக்கு உள்ளூராட்சி மன்ற சேவையில் கடமையாற்றிய உயர் உத்தியோகஸ்தர்களே மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பார்களென்றும் இவர்களுக்கே இதில் நியமனங்கள் அளிக்கப்படவேண்டுமென்றும் ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் உள்ளூராட்சி சேவைக் கமிஷனின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

---

...யதரிசி விருந்தொன்று நடத்தினர்.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திரு. ஸ்டுவர்ட் பிரஞ்சு ரஷ்ய வெளிநாட்டு மந்திரிகளை சந்தித்துப் பேசி...

மேற்காசியா, வியட்னாம் போன்ற பிரச்னைகள் பற்றி வெளிநாட்டமைச்சர்கள் ஆலோசனைகள் நடத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு. ஆபாஈபான் அமெரிகக ராஜாங்க அமைச்சர் திரு.ரோஜர்வை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் அவர் நிருபர்களிடம் பேசுகையில் வல்லரசுநாடுகள் மேற்காசிய விவகாரத்தில் சம்பந்தப்பட்டநாடுகள் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்கு உதவவேண்டும் என்றார்.

### தொடர்ந்து சண்டை

நேற்றுதொடர்ந்து சூயஸ் கால்வாய்ப் பகுதியில் சண்டை நடைபெற்றது இஸ்ரேலியர் விமானத்தாக்குதல்களை நடத்தினர்கள். ஒரு இஸ்ரேலிய ஜெட் விமானத்தை சுட்டுவீழ்த்தியதாக ஐக்கிய அரபுக்குடியரசு தரப்பினர் அறிவித்தனர்.

ஐ நா. மகாசபை இந்தப் பர்வகால விவாதங்களின் போது 96 விஷயங்களை ஆலோசனைக்கு எடுக்கவிருக்கின்றது. அவைகளில் மேற்காசியா, இனத்துவேஷம், ஆயுதக்குறைப்பு, தென்னாபிரிக்கா போன்றவை பிரதான விஷயங்களாகும்.

---

புங்குடுதீவு

## காந்திவிழாக் கொண்டாட்டம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு
அடுத்தமாதம் 2-ம் திகதி காந்தி நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடுவதென புங்குடுதீவு சர்வோதய சங்கம் முடிவுசெய்துள்ளது.

மேற்படிசங்கத்தின்ஆலோசனைக் கூட்டம் புங்குடுதீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கிராம சபைத் தலைவர் திரு. கே, மதியாபரணம் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, உள்ளூர்க் கைப் பணிப் பொருட்காட்சி, பொதுக்கூட்டம் என்பனவற்றை விழாவையொட்டி நடத்துவதென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

விழாவுக்கு முன்னோடியாக காந்தியடிகளின் லட்சியங்களில் ஒன்றான சிரமதான இயக்கத்தை வலுப்படுத்தி ஹரிஜன மககளுக்குச்சேவை புரிவதெனவும், விழாவை புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

எவ்வித வெளிச்ச...தியுமில்லை நோயாளர் இரவு நேரங்களில் மெழுகுவர்த்தியுடனேயே மலசலகூடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. இவ்விடயம்பற்றி யாழ். வைத்திய மேலதிகாரியுடன் பருத்தித்துறைப் பிரமுகர் சிலர் தொடர்பு கொள்ள விருப்பதாகத் தெரிகிறது

---

## சிறந்த ஆக்கவேலைக்குப் பரிசு

பருத்தித்துறை, ஞாயிறு
விஞ்ஞான பாடங்களில் ஏதாவது ஒன்றில் சிறந்த ஆக்கபூர்வமான வேலைக்கு இருபரிசுகள் வழங்குவதாகவும், அதன் மூலம் புத்தகத்துள் மண்டிக்கிடக்கும் விஞ்ஞானக் கல்வியைச் சமுதாயத்துக்குப் பயன்படுத்த முடியுமென்றும் கருதி வட பகுதி விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. எம், அற்புதநாதன் ஒரு பரிசுத்திட்டத்தை உருவாக்கிவருகிறார்.

இவ்வாக்க வேலைப்போட்டியில் வடபகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் பங்குபற்றலாமென்றும், அதிபரும் ஆசிரியரும் மாணவரை இத்துறையில் ஊக்குவிக்க வேண்டுமென்றும் அவர் கருத்துவெளியிட்டுள்ளார்.

---

## பாதுகாப்பு சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
இலங்கை வனவிலங்கு பாதுகாப்புச்சபையின் யாழ்ப்பாண மாவட்ட கிளைக் கூட்டம் இம் மாதம் 29-ம் திகதி யாழ்ப்பாணம் பாம் கோட் ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது.

அரசாங்க அதிபர் திரு. எப் சி பீட்டர்ஸ் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் வனவிலங்கு பாதுகாப்புச் சபை பொதுக்காரியதரிசி திரு கோபட் ஜெயவர்த்தனா சொற்பொழிவாற்றுவார்

---

## கல்லூரி பரிசளிப்புவிழா

உரும்பராய், ஞாயிறு
உரும்பராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. இவ் விழாவில் பிரதமவிருந்தினராக யாழ். உதவிஅரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினமும் திருமதி சபாரத்தினமும் கலந்துகொள்கிறார்கள். வடமாகாண ஆசிரியர்சங்கத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் மேலதிக விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவின் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்

---

...றகுட்பட்ட குழந்தைகள் இந்நோயினால் கூடுதலாகப் பாதிக்கப் படுகின்றமையால் இம்முறை 2 மாதத்திற்கும் 5 வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளுக்கும் இம்மருந்தைக் கொடுக்கவும்'' என்றும் இவ்வேண்டுகோளில் பெற்றோர் கேட்கப்பட்டுள்ளனர்.

---

வட்டுக்கோட்டையில்

## தடுப்பு நடவடிக்கை


சித்தன்கேணி, ஞாயிறு
வட்டுக்கோட்டைக் கிராம சபைப் பகுதியில் உள்ள 12 வட்டாரங்களிலும் இம்மாதம் 19ந் திகதி தொடக்கம் 29ந் திகதிவரை 10 வட்டாரங்களிலும், 30ந் திகதி தொடக்கம் வருகிற மாதம் 1ந் திகதி வரையும் 5ம், 6ம் வட்டாரங்களிலும் போலியோ நோய்த் தடுப்பு மருந்து குழந்தைகளுக்கு வழங்கச் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

---

கூடாது. அவர்களின் நல்லெண்ணம், ஒத்துழைப்பு இல்லாமல் நாம் தனித்து முயற்சிசெய்வதில் வெற்றி இலகுவில் கிட்டாது. கல்வி சுகாதாரம், குடிநீர் வசதி, குடி நிலம் போன்ற எல்லாம் சரியாக அமைந்தால் மட்டுமே நம்மினம் சுபிட்சமான பாதையில் செல்கிறதென நாம் திருப்தியடையமுடியும். இவைகள்...யம் கூறினார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரையாற்றும்போது கூறியதாவது.

''உங்கள் மறைந்த தலைவர் திரு. கு. தில்லையம்பலம் பண்பாடான உள்ளம் படைத்த வாலிபர். அவரின் இழப்பு உங்கள் சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பு. உங்கள் சமுதாயத்தில் பல நற்குணமானவர்களை உருவாக்கத் தாய்மார் தம் பிள்ளைகளைச் சிறுபராயந்தொட்டே சிறந்த முறையில் வளர்த்துவரவேண்டும் மறைந்த தலைவரின் உற்றார் உறவினருக்கு ஆழ்ந்த எனது அனுதாபம்.''


# பேகொன்

ஈ இரைத் தூள், மறைந்திருக்கும் சகல ஈ, கொசுக்கள், பூச்சிகளையும் உடனே ஒழிக்கும்

BAYER

பேகொன் ஈ இரைத் தூள், வசதியான சிறிய சிக்கனப் பக்கெட்டில் கிடைக்கும்.
பேகொன் ஒரு பிரத்தியேக பேயர் தயாரிப்பு.
வாங்கக் கிடைப்பவற்றில் மிகச் சிறந்த பீடைநாசினி.

உற்பத்தியாளர்:
பேயர், ஜெர்மனி

இலங்கையில் பிரதிநிதிகள்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

விநியோகஸ்தர்கள்: கொழும்பு ஏஜன்சிஸ் லிமிட்டெட்

P.9608



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம ணி வா க் கு**

ஒரு நோக்கமுமில்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படிப்பதைவிட, நல்ல விவேகத்தோடு கைத்தொழில் பயிற்சி பெறுவது அறிவை விசாகப்படுத்த எவ்வளவோ உதவியாயிருக்கும்.

— மகாத்மாகாந்தி.



# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதிமாதம் 6-ந் திகதி (22 - 9 - 69)


## சிங்களப் படிப்பு

இதற்கு முன் எழுதிய ஒரு தலையங்கத்திலே தமிழர் சிங்களம் படிப்பது விரும்பத்தக்கதென்று குறிப்பிட்டிருந்தோம். வேலையில்லாப் பிரச்னை சம்பந்தமாகவே அதை எழுதினோம். இவ்விஷயமாக மேலும் சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகின்றோம். தமிழர் சிங்களம் படித்தாலும் கூட அரசாங்கத்திலே அவர்களுக்கு வேலை கிடைக்குமென்ற உறுதியில்லை, கிடைத்தாலும் கிடைக்கலாம். இல்லாமலும் போகலாம், நூற்றுக்கு நூறு நிச்சயமாக எதுவும் கூறமுடியாது. இதே சமயத்தில் அரசாங்கத்திலே வேலைபார்க்க விரும்புபவர்கள் சிங்களம் படிக்க வேண்டியது இன்றியமையாததாகும். இப்படியிருக்கையில், அரசாங்கவேலையை விரும்பக்கூடிய தமிழர், சிங்களம் படிக்க முற்படுவது சாதாரண பகுத்தறிவுக்குட்பட்ட செயலாகும், சிங்களம் தெரிந்தாலே அரசாங்கத்தில் வேலை கிடைக்குமென்ற தவிர்க்கமுடியாத நிபந்தனையாகையால் தமிழர் சிங்களம் படிப்பதன் மூலம் வேலைக்கான தகுதியை அவர்கள் பெற முற்படக்கூடும். எப்படியும் சிங்களம் படிப்பு, தமிழருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்குத் தடையாக இருக்கச்செய்யாது.

இதே சமயம் சிங்களப் படிப்பு தமிழரின் முன்னேற்றத்துக்கும் அவர்களது கலாசார வாழ்க்கைக்கும் பாதகம் செய்யுமென்று கூறுவதற்கில்லை. பாதகம் செய்யாத நிலையில், தமிழர் சிங்களம் படிப்பதை ஒத்திப் போட்டுக் கொண்டு போவது நன்மையாகாது. சிங்களம் இலங்கையின் அரசாங்க மொழியென்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால், அரசாங்க சம்பந்தப் பட்ட வேலை வேண்டுபவர்கள் சிங்களம் படிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

ஓரளவு நல்லுணர்ச்சி ஏற்படுவதாகவுமிருக்கும். இரு சாராருக்குமிடையே இப்போதுள்ள விரோதங்களையும் தப்பெண்ணங்களையும் இது குறைக்கவும் உதவக்கூடும். சிங்கள மக்களுக்கும், சிங்கள மொழிக்கும் தமிழர் விரோதமல்லவென்பதையும் சிங்கள சமூகம் உணரும்படியும் இதனால் செய்யலாம். உலகிலெங்கும் ஒரு சமூக வாழ்விலே மொழி மிக முக்கியஸ்தானம் வகிப்பதால், சிங்கள மொழி சிங்கள மக்களின் மனதிலே மிக முக்கியமான இடம் பெற்றுள்ளது இரு சமூகங்களுக்குமிடையேயுள்ள தப்பெண்ணங்களைக் குறைக்க இரு சார்பினருமே முயற்சி எடுக்கவேண்டுமென்று வற்புறுத்தத் தேவையில்லை. ஒரு சாரார் மட்டும் முன்வரலாம் தமிழ்மக்கள் சிங்களம் படிப்பதன் மூலம், இந் நாட்டிலே சமூக நல்லுறவும், தேசீய ஒற்றுமையும் வளர ஒரு திட்டமான திருப்பம்ஏற்படுத்துபவராவர். அவற்றின் மீதே தமிழ் மக்களின் எதிர்காலமும், சுபீட்சமும் கட்டப்படமுடியும்.

மற்றோர் முக்கிய விஷயத்தையும் மனதிலிருத்த வேண்டும் ஆங்கிலத்தைத் தமிழர் படித்ததால், தமிழர் தங்கள் தனித் தன்மையையோ, கலாசார பாரம்பரியத்தையோ இழந்துவிடவில்லை. அதுபோலவேதான் சிங்களம் படிப்பதன் மூலமும் தமிழர் தங்கள் தனித் தன்மையையும், கலாசாரச் செல்வத்தையும் இழந்துவிடமாட்டார்கள், தமிழர் தமிழ்மொழியைக் கட்டாயமாகப் படிப்பதுடன், சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் இஷ்டமொழிகளாகப் படிப்பதே இன்றைய தேவையாகும். இன்று மாறியுள்ள நிலைமையைப் பற்றி தமிழ் மக்களும், தமிழ்த் தலைவர்களும் ஆலோசித்து விவேகத்துடனும், அரசியல் ஞானத்துடனும், உண்மை

விநோபாவின் பிறந்த நாள் சிந்தனை

# கடையனும் கடைத்தேற வழிசெய்வோம் அதுவே இறை தொண்டாகும்

'பிறந்தநாள் என்பது ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வந்துகொண்டிருக்கும் சாதாரணநிகழ்ச்சியே இதற்கு விசேஷமுக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை. புதிய நட்புறவுகளை அமைத்துக் கொள்வதையும், புதிய பணிகளைத் தொடங்குவதையும், பிறந்தநாளில் செய்வது என்று வைத்துக்கொண்டிருக்கிறேன். விஞ்ஞானத்தில் நன்மை விளையலாம் ஆனால் அத்துடன் பிரம்ம வித்தையும் இணையும் போதுதான் நற்பணிக்கு விஞ்ஞானம் உதவமுடியும்' என்று பிறந்தநாள் சிந்தனையாகக் கூறுகிறார் விநோபா அடிகள்

இப்பொழுதெல்லாம் என் பிறந்தநாளை மக்கள் எனக்கு நினைவுறுத்தத் தவறுவதில்லை. சிறுவயதில் என் தாய் நினைவுறுத்திக்கொண்டிருந்தாள். இடையில் மக்கள் என் மீதும் அன்புமாரி பொழியத் தொடங்கிய காலத்தில் இந்த நாளை நினைவுபடுத்தி தனதுபேரன் பின்னால் எனக்குத் தொல்லை கொடுக்க என் தாயாரில்லை- மறைந்துவிட்டார். ஆனால் நான் இந்த நாளை வேறொரு காரணத்தினால் நினைவில் வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் புதிய காரியம் தொடங்குவது, பழைய ஆசைகளைத் துறப்பது புதிய நட்புறவுகளை அமைத்துக் கொள்வது முதலியவற்றை நான் ஆண்டுதோறும் இந்த நாளில் செய்வது என்று வைத்துக் கொண்டிருக்கிறேன்.

### நாள்தோறும் நற்செயல்

ஒவ்வொருநாளும் 'இன்று நான் என்ன புண்ணியம் செய்தேன்' என்று யோசித்தல்வேண்டும் என்பது சாத்திரங்களின் கட்டளை. ஒவ்வொரு நாளிலும் நம் ஆயுளின் ஒரு பகுதி மறைந்துகொண்டே-கழிந்து கொண்டேவருகிறது சூரியன் நம் ஆயுளின் ஒரு பகுதியைப் பறித்துக்கொண்டே இருக்கிறான், எனவே இந்த நேரத்தில் நாம் செய்த நல்ல காரியங்கள் என்ன என்பதை நாம் நாள்தோறும் எண்ணிப் பார்த்தல் மிகவும் அவசியம். ஆகவேதான் ஒவ்வொரு நாளும் சந்தி வழிபாடு செய்யவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

சந்தி காலம் என்பது அற்புதத் தோற்றங்கள், அவ்வளவே. ஆனால் நாம் செய்யவேண்டுவது அந்த நேரத்தில் அங்கிக்கெனுத படி எங்கும் விளங்கும் இறைவனை எண்ணி நாம் ஆற்றிய பணிகள் பற்றியும் ஆற்றவிருக்கும் செயல்கள் குறித்தும் சிந்தித்தல் வேண்டும்.

### பிறந்தநாளின் பொருள்

இதுபோல பௌர்ணமி, அமாவாசை ஆகியநாட்களும் கடவுள் தியானத்திற்குரிய நாட்களே. ஆனால் நகரங்களில் வாழ்பவர்களுக்கு மின்சாரஒளி காரணமாக ஒவ்வொரு இரவும் பௌர்ணமியாகவே காட்சியளிக்கின்றதாதலால், அது வருவதும் போவதும் புரியாததாகவே போய்விடுகிறது. பதினைந்து நாட்களுக்கொரு முறை வரும் இவற்றிற்குப் 'பருவங்கள்' என்று பெயர். பருவங்கள் என்றால் தங்குமிடம் முகாம் என்றுபொருள். தங்குமிடமாய் அமைந்த அந்த நாட்களை நாம் சிந்திப்பதற்கென்றேவருவனவாகக் கொள்ளவேண்டும். இந்த வகையில்தான் ப[illegible]ன்மை விளையும் என்பதை நாட்களையும் பயன்படுத்த வேண்டும். அதுவரை நாம் என்னென்ன செய்தோம் என்பதை யோசித்துக் கணக்குப் பார்ப்பதற்காக வருபவையேஅவைஇந்தப் பிறந்த நாளும் இதே வகையைச் சேர்ந்ததுதான்.

நாம் பிறந்ததில் நம் தாய்மார்களுக்கு ஏதோ விசேஷமாகத் தோன்றியிருக்கலாமெனினும் பொதுவாகஇந்த சிருஷ்டியைப் பற்றியவரையில், ஒருவரது பிறப்பினாலோ, இன்னொருவரது சாவினாலோ லாபமோ நஷ்டமோ எதுவும் ஏற்படுவதாகச் சொல்லுவதற்கில்லை. எனவே நான் என்னைத் தனியாகக்கொண்டு என் வாழ்க்கையைப்பற்றி மட்டும் எண்ணுது நானும் சேர்ந்து அமைந்துள்ள இந்தச்சமுதாயம் பற்றியேசிந்திக்கிறேன். அவ்வாறு சிந்திக்கும்போது நான் காண்பதே முற்றிலும் வேறான காட்சியாகவுள்ளது

பாரதத்திலும், உலகெங்கும் பிரம்ம வித்தைநிலவ வேண்டும். இல்லையேல் ஆபத்து நிச்சயமாக வரும் என்றே எனக்குத் தோன்றுகிறது. விஞ்ஞானத்தால் நான் மறுக்கவில்லை. ஆனால் அதைப் பயன்படுத்துகின்ற முறையில்தான் அது நன்மைபயக்குமா அன்றித் தீமை விளைவிக்குமா என்று கூறமுடியும். எனவே விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கு முயற்சி செய்யும்பொழுதே அதை நல்ல காரியத்திற்காகப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடும் செய்யப்பட வேண்டும். இதற்குப்பிரம்ம வித்தை ஒன்றுதான் உதவும் என்பது என் திடமான நம்பிக்கை. எனவே பிரம்மத்தைத் தேடிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய காலத்தில் நான் இருந்த நிலைவேறு. இப்பொழுதுஎன் சிந்தனை முழுவதும் சமுதாயரீதியாகவே நடைபெறுகிறது. மேலும் அப்பழைய குறிக்கோளும், பிரம்மத்தைக் காணவேண்டுமென்ற வேட்கையும் ஓரளவுக்குத்திருப்தியாகிவிட்டது என்றே சொல்லவேண்டும்.

கடையனும் கடைத்தேற வழிவகை செய்வோமானால் அதுவே இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டாக அமையும்.

தி.மு.க. பயமுறுத்தல்

# தோட்டப்பகுதிகளில் குழப்பம் ஏற்படுமாம் 'சண்' தலையங்கம்

கடந்த 17-ம், 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இலங்கை தி. மு. கழக மகாநாடு பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்' ஆங்கில பத்திரிகையும் வேறு முக்கியமான சிங்கள பத்திரிகைகளும் [illegible]ய தலைப்புகளில் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் பிரசுரித்துவந்தன. தி. மு. க. பிரமுகர்கள் பேச்சுக்களில் குறிப்பிட்ட அம்சங்களை மட்டும் அப்பத்திரிகை [illegible] பிரசுரித்[illegible] வெளி[illegible]ட்டுவந்தன. இப்பொழுது கடந்த 21-ம் திகதி 'சண்'

கடந்த ஜூன் மாதம் நாடு பூராவிலுமுள்ள ஏராளமான உள்ளூர்ஆட்சி மன்றங்களும், சங்கங்களும், தி. மு. க நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக அரசியல் போராட்டத்துக்காக அவர்கள் நிதி சேகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தபொழுது. [illegible]சத்துரோக அரசியல் கும்பல்கள் பற்றி மேற்கொண்டும் புலன்விசாரணைகள் நடத்தும்படி அல்லது அதற்காக ஒரு கமிஷனையாவது நியமிக்கும்படி பிரதம[illegible]ந்திரியை நாம் கேட்டுக்கொண்டோம். இப்பொழுது அவ

யான துடுக்குத்தனத்தை அனுமதிக்கமுடியாது. விரிவான விசாரணையின்றி தி. மு. க.வுக்கு எதிரான மக்கள் எதிர்ப்பை அரசாங்கம் கை நழுவவிட்டுவிட்டதாக பொதுமக்கள் மனங்களின் அபிப்பிராயம் ஒன்று வளர்ந்து வந்துள்ளது.

இந்த நிலைமையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தையும் கருத்தில் கொண்டு, தி. மு. க.வின் போராட்டங்களுக்கு முளையிலேயே முற்றுப்புள்ளி வைக்க விரைவான நடவடிக்கை எடுக்கும்படியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாறன் எழுதுவது

காந்திசேவா சங்கத்தின் ஆதரவிலே மகாத்மாகாந்தி நூற்றாண்டு ஜயந்திவிழாவை யாழ்ப்பணத்திலே முதல் முதல் கொண்டாடும் பாக்கியம் எந்த ஊருக்குக்கிடைத்தது தெரியுமா? ஊரெழு கிராமத்துக்குத்தான்

அங்குள்ள பள்ளிக்கூட முன்றலை இளம் விவசாயிகள்சங்க மாணவர்கள் தோரணங்களால் அலங்கரித்துக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை எல்லாம் உற்சாகத்துடன் செய்திருந்தனர். விழாவுக்கான செலவை ஊர் மக்களே மகிழ்ச்சியுடன் வசூலித்துச் செய்ய முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

மேடையை மகாத்மாவின் திருவுருவப்படமும் ஒரு கைராட்டையும் அலங்கரித்தன. ஒரு சிறிய மாணவர் பிரார்த்தனையை நடத்தினார். சிறுவர் சிறுமியரெல்லாம் சேர்ந்து கூறினர்.

"உணவில்லாமல் பலநாட்கள் இருப்பேன். ஆனால் பிரார்த்தனையில்லாமல் என்னால் அரைக்கணமும் இருக்க முடியா" தென்றார் மகாத்மா தினசரி அதிகாலை 4-30 மணிக்கும், இரவு 7 மணிக்கும் அவரது ஆச்சிரமத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். பிரார்த்தனையை அவ்வளவு முக்கியமாக வற்புறுத்தியவரின் விழாவையும் பிரார்த்தனையுடனேயே ஆரம்பிப்பது மிகப்பொருத்தமேயல்லவா?

0 0 0

மகாத்மாவின் வாழ்க்கையைப்பற்றிப் பலர் பேசினர். வில்லுப்பாட்டு. கலைநிகழ்ச்சி மூலம் மகாத்மாவின் வாழ்க்கையை விளக்கியது பலரது மனதையும் கவர்ந்தது.

விழாவுடன் மகாத்மாவை மறந்துவிடாமல், அங்கு "சர்வோதயபாத்திர"த்தை அந்தக் கிராமத்திலே பல தாய்மார்களுக்கும்கொடுத்தனர். தினசரிஉலையில்அரிசிபோடும் போது, அப்பாத்திரத்திலே தாய்மார்கள் ஒரு பிடி அரிசியைத் தர்மத்துக்காகப் போடுவர். ஒவ்வொரு பௌர்ணமியன்றும் தொண்டர்கள் வந்து, அதில் சேரும் அரிசியைச் சேமித்து, காந்தி சேவா சங்கத்திலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு உதவ ஏற்பாடாகியுள்ளது.

ஈழத்திலே பல கோவில்களையும், பல கல்லூரிகளையும் கட்டும்போது, ஒவ்வொரு வீட்டிலும் பிடி அரிசிக் கலயம் வைத்து அரிசி சேமித்து தாய்மார்கள் அன்புடன் உதவியுள்ளனர். தாய்மார் மனம் வைத்து ஒத்துழைத்தால், எந்தக்காரியம்தான் வெற்றி பெறுது? ஈழத்திலே காந்தியின் பெயரால் நடக்கும் அந்த ஸ்தாபன தர்மம் ஓங்குவதற்கு நமது தாய்மார்கள் உதவுவது மகாத்மாவுக்குச் செலுத்தும் உண்மை அஞ்சலியாகும்.

பல பல கிராமங்களிலும் மகாத்மா நூற்றாண்டு ஜயந்தி விழாவைக் கொண்டாட பலர் உற்சாகத்துடன் முன்வருவதாகத் தெரிகிறது. நூறு வருடத்துக்கு முன் எங்கோ வட இந்தியாவிலே மகாத்மா பிறந்தார். இருபது வருடங்களுக்கு முன் மறைந்தார். நம்மில் பலரையும் இறந்த சிலநாட்களில் நம் குடும்பத்தார் கூட மறந்துவிடக்கூடும். ஆனால் எங்கோ, எப்போதோ பிறந்த மகாத்மாவை உலகமனைத்தும் இப்போது நினைத்து அஞ்சலி செலுத்துகிறது.

உள்ளத்தால் பொய்யா தொழுகினார் மகாத்மா. அதனால் அவர் வள்ளுவர் கூறியதுபோல், உலகத்தார் உள்ளத்திலெல்லாம் இருக்கின்றார். அதுபோல நாமும் உள்ளத்தால் பொய்யாது ஒழுக இந்த ஜயந்தி விழாகள் நமக்கு உதவி, நம் வாழ்வும் உண்மையில் பயனுள்ளதாகச் செய்யவேண்டும்.

இவ்விழாவைத் தங்கள் கிராமங்களில் நடத்த விரும்புபவர்கள் 'தலைவர், காந்தி நூற்றாண்டு ஜயந்தி விழா பிரசார சபை, 'ஈழநாடு' காரியாலயம், யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

0 0 0

பொய்யினன் மிடைந்த போர்வை புரைபுரை அழுகி வீழ மெய்யனாய் வாழமாட்டேன்வேண்டாற் றொன்றைவர் வேண்டார், செய்ய தாமரைகளன்ன சேவடியிரண்டுங் காண்பான், ஐயநானர்ந்துபோனேன் அதிகைவீரட்டானீரே.

— அப்பர்சுவாமிகள்

**சீதனப்பணம்**

ரூ. 20 [illegible]

ஏற்படுத்திப் போட்டுக் கொண்டு போவது நன்மையாகாது. சிங்களம் இலங்கையின் அரசாங்க மொழியென்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால், அரசாங்க சம்பந்தப் பட்ட வேலை வேண்டுபவர்கள் சிங்களம் படிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

தமிழர் சிங்களம் படிப்பதற்கு மற்ருெரு முக்கிய காரணமுமுண்டு. இரு சமூகங்களுக்குமிடையே அதனுல் மாகப் படிப்பதுடன், சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் இஷ்டமொழிகளாகப் படிப்பதே இன்றைய தேவையாகும். இன்று மாறியுள்ள நிலைமையைப் பற்றி தமிழ் மக்களும், தமிழ்த் தலைவர்களும் ஆலோசித்து விவேகத்துடனும், அரசியல் ஞானத்துடனும், உண்மை நிலைக்கு ஏற்றவாறும் காரியங்கள் செய்வரென்றே நம்புவோம்.

## சுமுகமான முடிவு வேண்டும்

எந்தப் பொது விஷயத்திலும் கருத்து வேற்றுமைகள் இருப்பது இயற்கை சமய, சமூக விஷயங்களிலும்கூட அப்படித்தான். சமூகத்திலே வேற்றுமைகள் அளவுக்கு மிஞ்சிவிடும் போது, அவற்றைக் குறைக்க வேண்டும். சமய சமூக விஷயங்களிலேயே அப்படியெனில் அரசியல் விஷயத்தில் வேற்றுமைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. சிலசமயம் அவை அவசியமில்லாமலும், தவிர்க்கக்கூடியதாகவுமிருக்கலாம். எப்படியும் அவற்றைக் கூடுமானவரை குறைக்க வேண்டும்.

காலஞ்சென்ற திரு. வன்னியசிங்கத்தாரின் சிலையை வைப்பதுபற்றி இச்சமயம் வேற்றுமை எழுந்துள்ளது. அவர் பிரபல தமிழ் அரசியல் தலைவராக இருந்தவர். தமிழ்ச் சமூகத்திலே முக்கியமான இடம் வகித்தவர். இப்போது அவர் நம்முடன் இல்லை. வாழ்க்கையிலே எந்தத் துறையிலும் தலைவர்கள் செய்த சேவைகளையும், ஞாபகத்தையும் நிலைநிறுத்தச் செய்வது, இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் எல்லாக் காலத்திலும் வழக்கமாக நடப்பதொன்றே. பொதுமக்களில் ஒரு சாரார் அவ்வித ஒரு தலைவரின் ஞாபகத்தை சிறப்பாக அவர் மறைந்தபின் நிலைநிறுத்த விரும்பின், அதற்கு மாருனவர்களும் கூட, அம்முயற்சியில் ஒத்துழைக்க முடியாவிடினும் பேசாமல் இருப்பதே, நற்பண்பும் கண்ணியமுமாகும். வன்னியசிங்கம் அவர்களின் சிலையைஸ்தாபிப்பதுபற்றிய வேற்றுமைகளை நீடித்துக் கொண்டு போவதன் மூலம் தமிழர்களிடையேயுள்ள இரு முக்கிய அரசியல் கட்சிகளிடையே மனக்கசப்புகளை அதிகரிப்பதுடன், தமிழரிடையே பிளவுகளையும் விரோத உணர்ச்சிகளையும் வளர்ப்பதாக இருக்கும். எந்தக் கட்சியிலும் சேராதவராயிருப்பினும், ஒவ்வொருவருக்கும் சொந்த அரசியல் உணர்ச்சிகள் இருக்கலாம்.

இது சம்பந்தமான வேற்றுமைகளை தொடர்ந்து நீடித்துக் கொண்டு போவதன்மூலம், தமிழ் மக்களிடையே சமரசமும் ஒற்றுமையும் ஏற்படுவது மேலும் தடைபடுவதாக இருக்கும். இந்த முக்கியமான நோக்கத்தை மனதில் கொண்டு இந்தத் தகராறை நீடிக்காமல், தீர்க்க வேண்டுமென்று பணிவுடன் கூறுகின்ருேம்.

எந்த இடத்திலே உருவச் சிலையை நிறுவுவதென்பது அடுத்த விஷயம். ஓர் இடத்திலே அதை நிறுவ முடியாமலிருப்பின், அதேபோல வேறு தக்க இடத்தைத் தெரிவு செய்து அங்கு அதை நிறுவச் செய்வது அசாத்தியமல்ல. பலர்மனதிலே அவ்வித தக்க இடத்தைப்பற்றிய பல கருத்துக்கள் இருக்கலாம். ஆகவே இந்த வேற்றுமையை நீடித்துக் கொண்டு போகாமல், இதற்கு ஒருமுற்றுப்புள்ளி வைத்து, ஒரு சுமுகமான முடிவுக்கு வர வேண்டுமென்று சம்பந்தப்பட்ட பொதுமக்களையும் தலைவர்களையும் வேண்டுகிருேம்.

---

மாகோ, ஞாயிறு

மாகோ ரயில் நிலையத்திலுள்ள பிரயாணிகள் தங்கும் அறையில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் பிரேத பரிசோதனையில் உடலில் நஞ்சு கலந்ததால் மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

கருதி, எனவே இந்த நேரத்தில் நாம் செய்த நல்ல காரியங்கள் என்ன என்பதை நாம் நாள்தோறும் எண்ணிப் பார்த்தல் மிகவும் அவசியம். ஆகவேதான் ஒவ்வொரு நாளும் சந்தி வழிபாடு செய்யவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

சந்தி காலம் என்பது இரண்டு. சூரியன் மலைவாயில் மறைவது ஒன்று; காலையில் உதிப்பது மன்ருென்று இவையிரண்டும் இறைவனை நினைத்து வழிபடுவதற்குரிய காலங்கள். 'சந்தியை' என்ற சொல் கருத்தாழம் நிறைந்த அருமையான சொல். சிறந்த முறையில் தியானித்தல் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். இரு வேளைகளில் வழிபடுவது என்ருல் எதை வழிபடுவது? காலையில் கிழக்கிலும், மாலையில் மேற்கிலும் தொடுவானத்தில் வண்ண விசித்திரங்கள் வெடித்துப் பரவுகின்றனவே அவைகளையா? இல்லை. அவை காட்சி இன்பம் அளிக்கும்

---

## வெளிநாடு சென்ருர்

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான திரு அப்பையா கிருஷ்ணமூர்த்தி விமானத்துறைப் பொறியியலாளர் பட்டப் படிப்பிற்காக லண்டன் சென்றுள்ளார். நாலு ஆண்டுகள் மேற்படிப்பை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பவுள்ள இவர் வண்ணர் பண்ணை ஐயனர் கோவிலடியை சேர்ந்த இளைப்பாறிய ஒவசியரான க.அப்பையா தம்பதிகளின் ஏக புத்திரராவார்.

கல்லூரியில் பயிலும் காலத்தில் உதைபந்தாட்டக் கோஷ்டி உறுப்பினராகவும், கடேற்படை உறுப்பினராகவும்,இன்னும் பல துறைகளிலும் சிறந்து விளங்கி ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் நன்மதிப்பை இவர் பெற்றவராவார்,

---

## சிவானந்த ஜயந்தி விழா

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு தெய்வ நெறிக்கழகம் நடாத்தும் சிவானந்த ஜெயந்தி விழா இம்மாதம் 24-ம்திகதி சிவானந்த ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கின்றது.

புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை இவ்வைபவத்துக்குத்தலைமை தாங்குவார். சுவாமி ஓங்காரானந்தா, வித்தியாதரிசி மு.பாலசுந்தரம் உட்பட பலரின் சொற்பொழிவும், கதாப்பிரசங்கம்,நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

---

...ய தலைப்புகளில் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் பிரசுரித்துவந்தன. தி. மு. க. பிரமுகர்கள் பேச்சுக்களில் குறிப்பிட்ட அம்சங்களை மட்டும் அப்பத்திரிகை ... பிரமாதப்படுத்தி வெளியிட்டுவந்தன. இப்பொழுது கடந்த 21-ம் திகதி 'சண்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றது அதன்முழு விபரம் பின்வருமாறு.

யாழ்ப்பாணத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் நாட்டின் உள்நாட்டு அமைதியையும் பாதுகாப்பையும் அச்சுறுத்துவதாக இருந்துள்ளன. அவர்களின் சண்டித்தனமான போக்கும், அதிகாரப் பேச்சுக்களும் பிரதம மந்திரியின் உடனடி கவனத்தைக் கவர வேண்டும்.

அக்கட்சியின் பொதுக் காரியதரிசி, வெளிநாட்டிலிருந்து ஆயுதங்களும், தோட்டாக்களும் கடத்திக் கொண்டுவந்து 'கொரில்லா' முறையான புரட்சியை நடத்துவதற்கு அழைப்பு விடுத்திருக்கிருர். இன்னுமொரு பேச்சாளர் தி. மு. க. மலைநாட்டைக் கைப்பற்றி தனது சொந்த அரசாங்கம் ஒன்றை நிறுவும் என்று உறுதிப்படுத்தியிருக்கிருர். ஆட்சிமன்ற முறையில் நம்பிக்கையில்லாத புரட்சிகர இயக்கமென்று கூறப்படும் தி. மு. க. முதல் நடவடிக்கையாக இலங்கையின் மத்திய பகுதியில் ஒரு நிலைமையை உருவாக்கி நாட்டில் அராஜகத்தைத் தூண்டிவிடும்.

தி. மு. க.வின் ஆசைகள் சம்பந்தமாக பல ஆட்சி மன்ற உறுப்பினர்கள் கவலை தெரிவித்திருப்பதை பிரதமர் அறிவார். நாட்டின் பாதுகாப்புக்கு இந்தக்கட்சி அபாயகரமானது என்ற அடிப்படையில் அதனை உடனடியாக தடைசெய்யவேண்டும் என்று திரும்பத்திரும்ப அவர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிருர்கள்.

இந்த ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சிலர், தி. மு. க. வில் சேரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள, அல்லது தூண்டப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக வாழும பகுதியைச் சேர்ந்தவர்கள். தென்இந்தியாவை இன்னமும் தன்தாயகமாகக் கருதிக்கொண்டு வலுவான தொடர்புகள் வைத்துக் கொண்டுள்ள இலங்கையரல்லாத தமிழ் தொழிலாளி இந்த நாட்டுக்கு விஸ்வாசமாக இருப்பான் என்று எதிர் பார்க்க முடியாது. எனவே பொறுப்பற்ற சக்திகளும், இங்குள்ள தி மு க. தலைவர்களும் அவர்களை இலகுவில் தம்வசமாக்கிக் கொள்ள முடிகின்றது.

தெரிவித்தபொழுது. ...சத் துரோக அரசியல் கும்பல்கள் பற்றி மேற்கொண்டும் புலன்விசாரணைகள் நடத்தும்படி அல்லது அதற்காக ஒரு கமிஷனையாவது நியமிக்கும்படி பிரதம ...ந்திரியை நாம் கேட்டுக்கொண்டோம். இப்பொழுது அவசரகாலம் அமுலிலிருந்தும் கூட தி. மு. க. தலைவர்கள் தேசத்துரோகப் பேச்சுக்களைப் பேசாமவிருப்பதாகத் தெரியவில்லை. இம்மாதிரி ...ந்து வந்துள்ளது.

இந்த நிலைமையில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தையும் கருத்தில் கொண்டு, தி. மு. க.வின் போராட்டங்களுக்கு மூளையிலேயே முற்றுப்புள்ளி வைக்க விரைவான நடவடிக்கை எடுக்கும்படியும், அதன் மூலம் தோட்டப் பகுதிகளில் வன்முறைகள் ஏற்படாமல் தடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிருேம்

---

# 'எதிரி கல்லால் எறிந்ததும் தகப்பனுர் கீழே விழுந்தார்'

## குப்பிளான்கொலைவழக்கில்சாட்சியம்

மல்லாகம், ஞாயிறு

"காலஞ் சென்றவர் எனது தகப்பனுர். சம்பவதினம் இரவு எனக்கும் காலஞ் சென்றவருக்கும் ஆச்சி சோறு கறி பரிமாறிக் கொண்டிருக்கையில் எதிரி எமது வீடடுக்கு வந்து தண்ணீர் கேட்டார். காலஞ்சென்றவர் தண்ணீர் இல்லைஎனக் கூறிய போது எதிரி எனது ஆச்சியை தள்ளி நிலத்தில் விழுத்திவிட்டு தனது தாயாரை தேடப் போவதாக வீட்டு அறைக்குள் நுழைந்தார். பின் ஏசியவாறு அறையைவிட்டு எதிரி வெளியே வருகையில்காலஞ் சென்றவருடன் இழு பறிப்பட்டார். பின் காலஞ் சென்றவரின் கைகளிலிருந்து விடுபட்ட எதிரி குனிந்து நிலத்தில் கல்லுப்பொறுக்கி எடுத்து காலஞ் சென்றவருக்கு எறிந்தார். கல்லு ஆண் உடம்பில் விழுந்ததால் இறந்தவர் நிலத்தில் விழுந்தார். நான் கத்திக் குளறினேன்."

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் குப்பிளான் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்தவரின் மகன் ஏ. கந்தசாமி வயது 13 என்னும் மாணவன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

மேலும் சில சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின் எதிரியை றிமாண்டில் தொடர்ந்து வைக்க உத்தரவிட்டு நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

குப்பிளான் வாசியான இளையதம்பி ஆறுமுகம் என்பவரை கொலைசெய்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த சுப்பையா அருணசலம் என்பவர் இவ் வழக்கில் சுன்னகம் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரி தரப்பில் ஆஜராஞர்.

---

## ரொத்து விபரங்களை வெளியிடுவோம்

பாணந்துறை, ஞாயிறு

பட்டினசபை அங்கத்தவர்கள் எல்லோரும் தங்கள் சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்றதொரு தீர்மானம் பாணந்துறைப் பட்டினசபையின் மாதாந்தககூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபை அங்கத்தவர்களில் ஒருவரான கே.எ.ஆர். சொலமன்பர்ஞன்டோ இத்தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிஞர்.

---

சுருட்டு

## தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்

நல்லூர், ஞாயிறு

உரும்பிராயில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த சுருட்டுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர். சம்பள நிர்ணய சபையின் தீர்மானப்படி 13 ரூபா கூலியை வழங்குவதாக முதலாளிமார் உறுதியளித்ததைத் தொடர்ந்து தொழிலாளர்கள் வேலைக்கு திரும்பியதாகத் தெரியவருகிறது.

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் திரு. ஆ. துரைராசசிங்கம், திரு. ஆ. ந. இராசன், திரு சி. நாகராசா ஆகியோர் இது சம்பந்தமாக உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து சமரச பேச்சுவார்த்தை நடாத்தினர். சந்திப்பின் போது 13 ரூபா கூலி வழங்குவதிலிருந்து குறைக்கமாட்டோம் என முதலாளிமார் வாக்குறுதி அளித்ததாகத் தெரிகிறது.

---

## மாநகரசபை வழக்கறிஞர்

யாழ்ப்பாணம், திங்கள்

வழக்கறிஞர் திரு. கந்தையா சோமாஸ்கந்தர் யாழ்ப்பாண மாநகரசபையின் வழக்கறுஞராகவும், சட்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

அரிசியைச் சேமித்து, காந்தி சேவா சங்கத்திலுள்ள ஏழைச் சிறுவர்களுக்கு உதவ ஏற்பாடாகியுள்ளது.

தாமரைகளன்ன சேவடியிரண்டுங் காண்பான், ஐயநானர்ந்துபோனேன் அதிகைவீரட்டானீரே.

— அப்பர்சுவாமிகள்

---

சீதனப்பணம்

# ரூ.20 ஆயிரத்தையும்கணவர் செலவழித்து விட்டாராம்

## மீட்டுத்தருமாறு கோட்டில் மனு

மட்டுவில், ஞாயிறு

'நான் என்னுடன் எடுத்துச் சென்ற வரதட்சணைப் பணம் 20 ஆயிரம் ரூபாவையும் செலவாக்கிவிட்ட என் கணவர் விவாகமாகிச் சில நாட்களிலேயே என்னையும் கைவிட்டார். என்னுடைய வரதட்சணைப்பணத்தைஎன்னிடம் பெற்றுத்தர வேண்டும்' எனக்கோரி ஆச்சிமுத்து என்ற இளம் பெண் தன்னுடைய கணவர் வைரமுத்து பொன்னம்பலம்மீது ஒரு வழக்கைத்தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ஸி. எம் தர்மலிங்கம் முன்னிலையில் விசாரணக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சாட்சியமளித்த பொன்னையா கனகரத்தினம் கூறியதாவது:

'எதிரி இப்பெண்ணைக்கல்யாணம்செய்துகொண்டார். எதிரிக்கு இருபதிஞயிரம் ரூபா வரதட்சணை தருவதாக கல்யாணப் பேச்சின்போது பெண்ணின் தந்தை கூறியிருந்தார் ஆனுல் அது பேச்சளவில் இருந்ததே தவிரக் கொடுபடவில்லை. எதிரி இந்தியா சென்று படித்ததெல்லாம் அவரின் தந்தையின் சொந்தப்பணம் இந்த எதிரியும் வாதியும் சில நாட்களில் பிரிந்துவிட்டதும்எனக்குத் தெரியும். இவர்களிடம் ஒரு காணியையும் நான் வாங்கினேன். அப்பணத்தையும் பெண்பகுதியினரிடம் தான் கொடுத்தேன்.

மேல்விசாரணை அடுத்த மாதம்14ந் திகதிவரைஒத்திவைக்கப்பட்டது.

---

## காவலரைத் தாக்கிவிட்டு

### கைதி தப்பி ஓட்டம்

கோட்டை, திங்கள்

கைதிகள் மூவரை ரயிலில் கொண்டு சென்ற சிறைக்காவலாளர்கள் கைதிகளால்தாக்கப்பட்டனராம். அத்துடன் கைதிகளில் ஒருவர் ரயிலிலிருந்து தப்பியும் ஓடிவிட்டாராம் மட்டக்களப்புக்கும்வெலிக்கடைக்குமிடைக்குமிடையில் இது நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## வெள்ள தடுப்பு ஆராய்ச்சி

கோட்டை, ஞாயிறு

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதுபற்றி ஆராய்வதற்காக மாஸ்கோவில்நடைபெறும் மகா நாட்டில் கலந்து கொள்வதற்காக நீர்ப்பாசன இலாகா டைரக்டர் திரு. வி. என். ராஜரத்தினம் இம்மாதம் 23-ந் திகதி சோவியத் யூனியனுக்குப் பிரயாணமாகிருர்.

தென்னிலங்கையில் நில்வளகங்கைப் பகுதியில் பெரிய அளவில் வெள்ளத் தடுப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் வெள்ளத்தடுப்புபற்றி விசேஷமாக ஆராய்ந்து வரும்படி திரு. இராஜரத்தினம் காணி நீர்ப்பாசன அமைச்சினுல் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்.

---

## எதிரிகள் விடுதலை

மல்லாகம், ஞாயிறு

வசாவிளான் வீடு எரிப்பு வழக்கு விசராணையின்பின் மல்லாகம் நீதிபதி திரு எஸ் ஆனந்தகுமாரசாமி எதிரிகள் நால்வரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்

வசாவிளானைச் சேர்ந்த மாதன் வைரமுத்துவின் வீட்டுக்கு நெருப்பு வைத்து சேதப்படுத்தியதாக காங்கேசன்துறைப் பொலிசார் இவ்வழக்கை புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த சீவரத்தினம், இராசரத்தினம், நல்லையா, சீனித்தம்பி ஆகிய நால்வர்மீதும்தொடர்ந்திருந்தனர்

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் அரசுவால்டன் புறக்டர் ரி தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர்

---

## தொகுதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விலை அதிகமாக இருப்பதாகவும், விலை குறைந்த ஒரு காணியைத் தெரிவுசெய்யும்படி காணிக் கமிஷனர் பதிலனுப்பியிருப்பதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org